ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக ஐப்பசித்திங்கள் 1933ஞூ அக்டோபர்மூ—நவம்பர்மூ	பரல் ரு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பூணுவதோ ரரவங்கண் டஞ்சேன்
புறங்காட்டி லாடல்கண் டிகழேன்
பேணீராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவே ஞகிலு மறவேன்
காணீராகிலுங் காண்பனேன் மனத்தாற்
கருதீ ராகிலுங் கருதி
நானே லும்மடி பாடுத லொழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ.

பதவுரை:—

நாட்டியத்தான்குடி நம்பீ—திருநாட்டியத்தான்குடி என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற உத்தமனே,

அரவம் பூண் ஆவது (உம்) நாண் ஆவது (உம்) கண்டு அஞ்சேன்—நீர் உமது திருமேனியில் பாம்பை ஓர் ஆபரணமாய் அணிந்திருத்தலையும் திரிபுரங்களை யெய்தற்கு மேருவரையாகிய வில்லுக்கு நாணாகக் கட்டி யிருத்தலையும் பார்த்து உம்மை வணங்குதற்கு அஞ்சமாட்டேன்.

புறங்காட்டில் ஆடல் கண்டு இகழேன்—நீர் சுடுகாட்டில் நடனம் செய்வதாக (அருள்நூல்கள் கூறுதலைப்) பார்த்து (சமணசமய முதலிய புறச்சமயிகள் உம்மை இகழ்தல்போல) நான் இகழ்ந்து பேசமாட்டேன்,

பேணீராகிலும் பெருமையை உணர்வேன்—நீர், எல்லா உயிர்களும் உம்மை அடைந்து பேரின்பமடைதல் வேண்டும் என்ற வியாபக வேட்கை (இச்சை) உடையராயிருத்தலன்றித் தனியே என்னைப் பேரின்ப மடைதல் வேண்டுமென்று விரும்பாவிட்டாலும் எனது வியாப்பிய வேட்கை உமது வியாபக வேட்கையில் அடங்கி நின்று தொழிற் படுதலால் விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களும் பேரின்பமடை தல் வேண்டுமென்ற சங்கற்பத்தால் உயிர்களிடத்தில் அவ் வேட்கையை விளங்கும்படி எப்பொழுதும் பேருதவிசெய்து கொண்டு வரும் பெருமையை நான் எனது உள்ளத்தில் உணர்வேன்.

கருதீராகிலும் நான்எல் கருதி உம் அடிபாடுதல் ஒழியேன்—நீர் எனது சித்துத் தன்மையாகிய அறிவைத் தனியே அறியாவிட்டாலும் நானே உம்மோடு இரண்டறக் கலந்து நீர் எனக்கு வேறாக நின்று அறிவித்தும் உடனாய்நின்று அறிந்தும் வருதலை அறிகிற உமது சித்துத் தன்மையை உணர்ந்து அவ் வுணர்ச்சி காரணமாக உம்மை, எப் பொழுதும் வாயினாற் றேவாரப்பாக்கள் பாடிக்கொண்டிருப்பேன்.

காணீராகிலும் என் மனத்தாற் காண்பேன்—நீர் எனது சத்துத் தன்மை யைத் தனியே காணாவிட்டாலும் உமது வியாபகச் சத்துத் தன்மை யில் அடங்கியிருக்கிற நான் உமது சத்துத் தன்மையை எனது உள்ளத்தில் கண்டுகொண்டிருக்கிறேன்.

பிறவேனாகிலும் மறவேன்—மேலே கூறியவாறு எனது வியாப்பிய வேட்கை அறிவு செயல்கள் முறையே உமது வியாபகவேட்கை அறிவு செயல்களுக்குள் முற்றிலும் அடங்கியிருந்து நான் இப் பிறவி யில் பிறவாத தன்மையை அடைந்தேனாயினும் (முன் கைலாயத்தில் நான் கமலினி அநிந்திதை என்னும் பெண்களை நினைத்ததுபோல அன்றி) நான் உமது திருவடிகளையே எப்பொழுதும் நினைந்து கொண்டிருத்தலன்றி மறக்கமாட்டேன்.

விளக்கவுரை:—

நம்பீ—நம்பி—ஆண்மகனிற் சிறந்தவன்; உத்தமன்; ஈற்று இகரம் நீண்டு நம்பீ என விளிப்பெயராயது.

அரவம்பூண் ஆவது (உம்) நாண் (ஆவதும்) கண்டு அஞ்சேன்—நாட்டியத் தான்குடியிலுள்ள சிவபெருமான் திருமேனியில் பாம்பு ஆபரணம் அணியப்பட்டிருத்தலால் சுந்தரமூர்த்தி அடிகள் அதனைக் கண்டு இங்கே அத்தலத்துப் பதிகம் முதலாவது பாட்டிற் கூறுகின்றார்.

ஆவது—தொழிற்பெயர்—ஆதல். பூண் ஆவது—பூணாக அணிந்திருத் தல். நாண் ஆவது—நாணாகக் கட்டியிருத்தல். ஆவது என்ற சொல்லை நாண், பூண் என்ற இரண்டு சொற்களோடுங் கூட்டுக. எண்ணும்மைகள்

விகாரத்தாற் றெக்கன. அரவம் என்பது இங்கே அரவம்போல மூலாதாரத்தில் வளைந்து இயங்குகிற சுத்தமாயையிலுள்ள குண்டலி சத்தியைக் குறிக்கிறது. சிவபெருமான் அரவத்தைப் பூணாக அணிதல் என்பது அண்டத்தில் சிவபெருமானது அருட்சத்தியானது சுத்தமாயையை இயக்குதலாலுண்டாகும் குண்டலி சத்தியால் நிகழ்கிற உச்சுவாசம் (மூச்சு உள்வாங்குதல்) நிச்சுவாசம் (மூச்சு வெளியே விடுதல்) என்ற பிராண அபானவாயு இயக்கங்களைக் குறிக்கிறது. இவ்வாறு அண்டத்தில் நிகழும் உச்சுவாச நிச்சுவாசங்கள் காரணமாக உயிர்களுடைய பிண்டத்திலும் உச்சுவாச நிச்சுவாசங்கள் நிகழ்கின்றன. இந்த உச்சுவாச நிச்சுவாசங்கள் முறையே பிங்கலை இடைகலை நாடிகளிற் சூரியகலை சந்திரகலைகளாக வலது இடது நாசிகள் மூலமாய் அஞ்சு நாழிகைக்கு ஒருமுறை மாறிமாறி நிகழ்கின்றன. இவ்வாறு இயங்குகிற உச்சுவாச நிச்சுவாசங்கள் காரணமாக மாந்தர் உலகபோக வாழ்வில் திரோத மலம் வயப்பட்டு நல்வினை தீவினைகளைச் செய்து மலபரிபாகம் அடையப் பெறுகிறார்கள். பாம்பு ஆகிய குண்டலி சத்தியானது ஆன்மாக்களைப் பக்குவப் படுத்துகிறதற்காகப் பிண்டத்தில் உச்சுவாசம் நிச்சுவாசங்களுண்டாம்படி செய்து திரோத மலம் வயப்பட்ட நல்வினை தீவினைகளோடு கூடிய உலக வாழ்வை நிகழ்த்துவிக்கின்றது என்பது ''வஞ்சப் பெண்ணாங்குகோயில் வாளெயிற்றரவந் **துஞ்சா—வஞ்சப் பெண்ணிருந்த சூழல்''** என்று திருநாவுக்கரசு அடிகள் தனி—திருநேரிசை 5வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ஆணவ மலத்தை இயக்கி உயிர்களுக்குத் திரோபவம் நிகழ்வித்தல் சிவபெருமானுடைய ஊன நடனத்தால் ஆகிறது. நாண் என்பது சிவபெருமான் திரிபுரங்களை எரிக்க எய்தற்கு மேருவரையாகிய வில்லிற் கட்டப்பட்டிருக்கும் வில்நாண். மேருவரை, முதுகில் சுழுமுனைநாடி இயங்குகிற வீணா தண்டத்தைக் குறிக்கிறது. பிங்கலை இடகலை நாடிகளின் வழியாகச் செல்கின்ற பிராணவாயுவை, அந்நாடிகளின் அடித்துவாரங்களைப் பிராணாயாமத்தால் அடைத்துச் சுழுமுனை நாடி வழியிற் புருவம் நடுவிற் செல்லவிட்டு மேலே சந்திர மண்டலத்திலுள்ள அமிர்தத்தை ஒழுகச்செய்து தனது உடல் முழுதும் தேக்குகிற யோகி ஒருவன் திரோத மலம் வயப்படுதலைக் கடந்து அருள் அறிவைப் பெற்று அவ் வறிவால் மும்மலங்களையும் வென்று பேரின்பம் அடைகிற பருவத்தை அடைகின்றான். (திருவாதவூரடிகள் புராணம் திருப்பெருந்துறைச் சருக்கம் ௧௧௯-வது பாட்டுக் கருத்து நோக்குக.) சிவபெருமான் மேருவரையாகிய வில்லில் பாம்பாகிய நாணைக் கட்டித் திரிபுரங்களை எரித்தலானது ஆன்மாக்கள் திரோத மலத்தினின்றும் நீங்கி அருள் அறிவாகிய மெய் யுணர்வைப் பெற்றுச் சத்திநிபாதமுடையவர்களாய் ஆணவம் வினை மாயை என்ற மும்மலங்களையும் வெல்லுதற்குக் காரணமாயிருக்கிறது. பாம்பு நாணானது வில்லினால்

அம்பெய்து திரிபுரங்களை அழித்தற்குக் காரணமாயிருத்தல்போல பிராண வாயுவைச் சுழுமுனைநாடி வழியில் யோகத்தாற் செலுத்திப் பெறப்படுகிற அருளறிவு ஆகிய மெய்யுணர்வானது மும்மலங்களையும் கெடுத்தற்குக் காரணமாயிருக்கிறது. "முப்புரமாவது மும்மல காரியம்" என்று திருமூலர் திருமந்திரம் 343-வது பாட்டிற் கூறியருளினமை காண்க. பக்குவப்பட்ட உயிர்களுக்குத் திரோபவத்தை நீக்கி அருளலைச் செய்தல் சிவபெருமானுடைய ஞான நடனத்தால் நிகழ்கின்றது.

மேலே கூறியவாறு சிவபெருமான் பாம்பை ஆபரணமாகத் தமது திருமேனியில் அணிந்திருத்தல் ஆன்மாக்கள் உலக வாழ்வில் இன்ப துன்பங்கள் நுகர்தல் காரணமாகப் பக்குவமடைதற்குச் செய்கிற நல்வினை தீவினைகளைக் காட்டுகிற அடையாளமாகவும் சிவபெருமான் தமது கையிலுள்ள மேருவாகிய வில்லில் பாம்பு நாணுகக் கட்டப்பட்டிருத்தல் திரோத மலத்தைக் கடந்து பக்குவப்பட்ட ஆன்மாக்கள் தமது அருள் அறிவைப்பெற்றுப் பேரின்பம் அடைதலைக் காட்டுகிற அடையாளமாகவும் இருத்தலை நன்கு அறிந்து அடிகள் "பூணுவதோராவங் கண்டஞ்சேன்" என்றூர். உயிர்கள் மேல் வைத்த பேரிரக்கத்தால் சிவபெருமான் இவ்வாறு அவைகளுக்கு இடைவிடாது செய்துவரும் பேருதவியை உயிர்கள் நினைந்து அவனிடத்தில் அன்பு செய்து வழிபடுதலே அவரை அடைதற்குவழி யன்றி, துன்பஞ் செய்கிற ஒருவனைக் கண்டு அஞ்சுதல் போல அஞ்சுதல் வழியாகாது என்ற கருத்தை அடிகள் கூறி யருளினர்.

புறங்காட்டில் ஆடல் கண்டு இகழேன்—சிவபெருமான் சுடுகாட்டில் ஆடுதல் அவர் உயிர்களை இளைப்பாறச் செய்தற்காக. மாயையினாலாகிய தனுகரண புவன போகங்களை அழித்து அவை அழிந்துகிடக்கிற சுடுகாட்டில் மீளவும் தனுகரண புவன போகங்களைப் படைத்தற்காக அண்டத்திற் செய்கிற சூக்கும நடனத்தையும் பிண்டத்தில் உயிர்களுடைய சுழுத்தி அவத்தையில் அவைகளுடைய வேட்கை அறிவு செயல்கள் விளங்கி அறியாமை நீங்குதற்காக நள்ளிருளிற் செய்யும் சூக்கும நடனத்தையும் குறித்தலால் அதனைத் தமது மெய்யுணர்வில் உணர்ந்த அடிகள் புறங்காட்டில் ஆடல், உயிர்களுக்குச் சிவபெருமான் பெருங்கருணையினாற் செய்யும் பேருதவியாயிருத்தலால் அதனைக் கண்டு புகழ்தலன்றி இகழ்தலுக்குச் சிறிதும் காரணமில்லை என்பார் 'புறங்காட்டிலாடலிகழேன்' என்றூர்.

பேணீராகிலும் பெருமையை உணர்வேன் (1) கருதீராகிலும் கருதி (2) காண்பீராகிலும் என்மனத்தாற் காண்பன் (3)	இங்கே கூறப்பட்ட சிவபெருமானுடைய(1)பேணுதிருத்தல்(2)கருதாதிருத்தல் (3)-காணுதிருத்தல் மூன்றும் அவர் தமது வியாபகத்தில் அடங்கியுள்ள ஆன்மாக்களைத் தனித்தனி

பேணுதிருத்தலையும் தனித்தனி கருதாதிருத்தலையும் தனித்தனி காணுதிருத்தலையும் குறிக்கின்றன. இவை மூன்றும் முறையே அவருடைய இன்பத் தன்மையையும் அறிவு (சித்து) த்தன்மையையும் உண்மை (சத்து) த்தன்மையையும் குறிக்கின்றன. சிவபெருமான் தனியே யாதொரு விகாரமுமடையாதிருப்ப அவரது அருட்சத்தி சங்கற்பத்தினுலே ஐந்து மூர்த்திகளும் ஐந்து தொழில்களும் செய்தலால் அடிகள் பேணீராகிலும் கருதீராகிலும் காணீராகிலும் என்றார். "பூவண்ணம் பூவின் மணம் போல மெய்ப்போத வின்பம், ஆவண்ண மெய்கொண்டவன்றன் வலியாணை தாங்கி, மூவண்ணல்தன் சந்நிதி முத்தொழில் செய்யவாளா, மேவண்ணல்" என்று பரஞ்சோதி முனிவர் **திருவிளையாடற் புராணத்திற்** கூறியருளினமை காண்க. மாந்தர் உயிர்கள் ஒன்ருென்ருய் வேட்டு வேட்கை செய்தலும் ஒன்ருென்ரு யறிந்து அறிதலும் ஒன்ருென்ருய்ச்செய்து செய்தலும் போலச்சிவபெருமான் வேட்டலும் அறிதலும் செய்தலும் செய்யாமல் ஒருசேர வேட்டு அறிவந்து செய்து உயிர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் விளங்கும்படி செய்கின்ருன் என்ற உண்மையை அடிகள் கூறி யருளினர்.

கருதீராகிலும் நான் ஏல கருதி—ஏல - என்னில் என்ருல் நீர் கருதீர் நானே என்ருல் உம்மைக் கருதுவேன் என்பது பொருள்.

பிறவேனுகிலும் மறவேன்—இதனுல் அடிகள் தாம் முன் கைலாயமலையில் சிவபெருமானை ஒரு கணம் மறந்து கமலினி அநிந்திதை என்ற உமாதேவியார் சேடியர்களை நினைத்ததைக் குறிப்பிடுகின்ருர் என்பது தோன்றுகிறது. ஒரு கணம் மறந்திருந்தது சிவபெருமானைப் பிரிந்து இப்பூமியிற் பிறத்தற்குக் காரணமா யிருந்த அநுபவத்தை அறிந்து அவ்வாறு அவர் கூறுகின்ருர். அடிகள் தாம் இனிப் பிறவாத தன்மையை அடைந்திருத்தலை "இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்" என்று **நமச்சிவாயப் பதிகம்** முதலாவது பாட்டிற் கூறியருளினர்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

தீமை மலிந்த இவ்வுலகைச் சீர்திருத்துவது எப்படி ?
நன்மையோடு கூடிய உலகை யுண்டாக்குவதனுலேயே.

—எமர்ஸன்.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

(வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் M.A., B.L.)

முன் ௬௰-ம் பக்கத் தொடர்ச்சி

சேட்டிப்புள்ளியில் ஒரு துப்பு:—கொலை நூலோ என்ற ஐயம் எழுந்தபின், இதனை மூடி வைத்துவிட்டுக் கை கழுவிப் போவார் பலர். ஊடுருவி ஆராய்வதற்கு மனம் எவ்வாறு எழும்? ஆகவே மேல்வாரியாக ஆராய்ந்து உடனே ஒரு முடிபிற்கு வந்தாலன்றி, இந்நூலில் ஊக்கம் எழாதன்றோ? மூர்த்தியார் ஒரு செட்டியார் ஆதலின், அவருடைய வரலாற்றைப் பற்றியும் செட்டாக நாம் ஒரு சிறு புள்ளி போட்டுப் பார்ப்பதும் பொருத்தமேயாம். "சேக்கிழார் இவ்வரலாற்றை எத்தனை பாடல்களால் பாடி முடிக்கின்றார்? தற்கொலை என்று பிறர் கூறும் கைதேய்த்த வரலாற்றை எத்துணைப் பாடல்களில் வற்புறுத்துகின்றார்? "அரசன் மாயவேண்டும்" என்ற வேண்டுகோள் ஏதோ ஒரு மூலை முடுக்கில் பதுங்கிக் கிடக்கின்றதா? புனைந்துரையில் முற்ற முடியப் பரந்து வருகின்றதா? நுண்ணிய நோக்கமின்றி, இவ்வாறு பருத்த நோக்கத்தால் ஆராயும்போதும் மேலெழுந்த ஐயத்திற்கு ஒரு சிறிதும் இடம் இல்லை என்பது வெளியாகின்றது. சேக்கிழார் இப்பெரியாரது வரலாற்றை, 49 செய்யுள்களில் பாடி முடிக்கின்றார்; கை தேய்த்த வரலாற்றை இரண்டுபாட்டில் சுருக்கியும், சாவ நினைத்தலை ஒருபாட்டின் ஒரு மூலையில் ஓரடியின் ஒரு முடுக்கில் மறைத்தும் அமைத்துப் பாடிப் போகின்றார். இவையே முடிந்தமுடிபானால் 21வது பாடலோடு இந்த வரலாறு முடிந்திருத்தல் வேண்டும் அன்றோ? அவ்வாறு முடியாமல் மேலும் 28 பாடல்கள் பாடிப் போகின்ற சேக்கிழார்க்கு வேறேதோ ஒரு நோக்கம் உண்டு என அப்பாடல்களே நமக்குக் கோள் சொல்லவில்லையா? துப்பும் கிடைத்தபோது பின்பற்றி ஆராய்வது துப்பறியும் வரலாறுகள் வழங்கிவரும்

இந்தக் காலத்தில் அருமையல்லவே? அஃதல்லவா பலருக்கும் பொழுதுபோக்காக இருக்கிறது!

சேக்கிழார்க் கோட்டை முற்றுகை :–28 பாடல்களை மேலும் பாடிப்போகும் சேக்கிழாரது நோக்கந்தான்யாது? ஆனால், அந் நோக்கத்தை அறியப்புகும் நம்மைத் தடுத்து நின்று இக்கேள்வி கேட்பதே தவறு என்பார் சிலர். "ஏதோ ஒரு நாயனாருடைய வரலாறு அகப்பட்டது அதைப் பாட்டாகப் பாடிவிட்டார். அதிலே போய் இல்லாததொரு முயற்கொம்பை ஆராய்வது ஏன்?" என்பார் ஒருசாரார். "ஈதென்ன? இவ்வரலாறு சேக்கிழாரே கட்டிவிட்டதோ? ஏதோ ஒரு நோக்கத்திற்கேற்பத் தம் வரலாற்றைப் புனைந்துரைத் துரைத்துப் போகின்றார் என்று சொன்னாலும் சொன்ன வாய் புழுத்துப் போகாதா? 'உல கெலாம்' என்று முதலடி எடுத்துக் கொடுத்த திருவருளே பாடிக்கொண்டே போக அதனை இவர் எழுத்தாணியால் ஓலையில் எழுதிக்கொண்டே போனார். இதிலே இவருடைய நோக்கம் எங்கே புகுகின்றது?' என்பார் வேறு சிலர். "சேக்கிழாரோ நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளரில் தலைசிறந்தவர். ஏதோ ஒரு நோக்கத்தின் பயனாக வரலாறுகள் ஆராய்ச்சியாளரது மனத்திலே வேண்டும் உருப்பெற்று எழுவது இல்லை. அவ்வாறு திரித்துக் கூறும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர் அப் பெரியார். நடந்ததை நடந்தபடி தமது ஆராய்ச்சியால் கண்டறிந்து எழுதுகிறார்" என்பர் மற்றும் சிலர். இன்னும் சிலர் இந்நூலைச் சிவப்பட்டாம் போர்வையிட்டு மூட்டைகட்டி மூலையில் வைத்துப் பூவும் புகையும் கொண்டு போற்றி நின்று "இந்நூலைத் திறக்கப்போமோ? ஓதியுணரப்போமோ?"என்று மனங் கசிந்துருகுகின்றனர். இந்த நான்கினத்தாரும் நாற்புறமும் முற்றுகையிட்டு நிற்க, பெரிய புராணப் பெருங் கோட்டையினுள்ளே புகுந்து நடுவே நிற்கின்றார் சேக்கிழார்.

புலவரின் படைப்பு :—இவர்கள் சேக்கிழாரை நாம் காணாத படி தடுத்து நின்றாலும், அப்பெரியாரின் புகழொளி அந்த வழியாகப் போகின்றவர்களுடைய கண்ணைக் கவர்கின்றது. பாவே உடலாய் அன்பே உயிராய் அருளொளி பரப்பி அப் புனைந்துரைக் கோட்டையின் மேனின்று புன்னகை புரிந்து அவ்

வழியே போவார்க்குப் புத்துயிரளிக்கின்றார் அப்புலவர் பெருமான். அவரைச் சுற்றி நிற்பாரும் அப்பெரியார் சிறந்த தமிழ்ப் பாவாணர் என்பதனை நமது நல்ல காலத்தின் பயனாகத் தம்மையும் மறந்து ஒப்புக்கொள்கின்றார்கள். கல்லும் கனியும் கலந்துகிடக்கும் காட்டினுள்ளே புகுந்த ஒருவன் கல்லைத் தின்னாமல் கனியையே அருந்துகின்றான்; கண்டதைத் தின்றான் எனச் சொல்லவும் கூடுமோ? அவ்வணமே உலகத்தில் பல பொருள்களும் பரவி நிற்க, அவற்றில் யாதேனும் ஒன்றைப் பாடும் பாவாணனும், அகப்பட்டதைப் பாடுபவன் ஆவானோ? சேக்கிழாரைப் போன்ற கடவுட் புலவர்கள் கைக்கெட்டியதையும் கண்ணுக்கெட்டியதையும் காதுக்கெட்டியதையும் தமது உள்ளத்தோடும் உயிரோடும் ஒருங்கியைய வையாது வாய்க்கு வந்தபடி பாடப் புகுவதில்லை. கருத்துக் கிசைந்ததையே பாட முன்வருகின்றனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பொய்யர்கள் இவர்களல்லர். உள்ளும் புறமும் ஒற்றித்து நின்ற இடமே பாட்டெனப் பெயர் பெறும். எத்தனையோ வரலாறுகள் இருப்ப இப்பெரியார் இவற்றைப் பாடியது என்? இவருடைய உள்ளங் கவர்ந்தெழுந்த வரலாறுகள் இவையேயாம். வரலாறுகள் பலவும் புலவர்களின் உள்ளத்தை உருக்கித் தமக்கேற்ற புனைந்துரை வடிவம்கொண்டு, அங்கே உள்ளத்தினுள்ளேயே தங்கமாட்டாது வெளியே வெள்ளமாய்ப் பொங்கி, அவர்களையும் அறியாமல் பாட்டாக வழிந்து உலகிற் பரவுகின்றன. ஆகவே புலவருடைய பாடலை நாம் ஓதும்போது, அவருள்ளத்தை அவ்வரலாறு எவ்வாறு அடிமை கொண்டதெனவும், எவ்வாறு உள்ளத்தை உருக்கி அதனோடு ஒன்றாகி உருப்பெற்று எழுந்ததெனவும் அறியலாம் அன்றோ? பழைய எழுத்தும், பழைய சொல்லும், பழைய கருத்தும் பழைய வரலாறும் கொண்டே புது வடிவமும், புத்துயிரும் படைத்துப் புனைந்துரை வரலாற்றைப் பாட்டாகப் பாடுகின்றவனே தலைசிறந்த பாவாணனாகும். ஈதன்றோ புதுமை? கற்றச்சன் செதுக்கிய வடிவழகை நோக்காது "ஈதொரு கல்லன்றோ" என இடறி விழுந்தழுவாரைப் போலப், பாவலரின் உண்மைத் திறத்தை உணராது உழல்பவர்கள் அந்தோ மிகவும் இரங்கத்தக்கவர்! இரங்கத் தக்கவர்!

சட்டம் எழுதும் சிறுவர் :—திருவருள் தான் கூறுவதை அப்படியே எழுதிக்கொண்டு போவதற்குச் சேக்கிழாரைத் தேர்ந்தெடுப்பானேன்? மேல்வரிச் சட்டத்தைப் பார்த்துக் கீழ்வரிகளை எழுதும் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களையே வருத்தமின்றிப் பொறுக்கி எடுத்திருக்கலாமே? இவ்வாறு கூறுவோர் தம்முடைய சிறுவர்கள் சேக்கிழாரினும் சிறந்தவர்கள் எனக் கனாக் காண்கின்றனர் போலும்!

மெய்யா? உண்மையா?—நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் எழுதுவது மெய். பாவாணன் பாடுவது உண்மை. மெய் என்பது இருந்ததை இருந்தவாறே எடுத்துக்கூறுவது. உண்மை என்பதோ உலகில் இருப்பதன் உள்ளீடாய் விளங்கும் உயரிய இயல்பினை எடுத்துக் காட்டுவது. "இந்த ஆண்டு இந்தத் திங்கள் இந்த நாளில் இவர் பிறந்தார்; இதனைச் செய்தார். இந்த நாள் இறந்தார் இப்பெரியார்" என்பதோடேயே ஆராய்ச்சியாளர் வரலாறு தொடங்கி முடிகிறது. ஆனால், ஆண்டும் நாளும் உண்மையாவது என்றும் இல்லையாம். எனினும் அவையன்றோ ஆராய்ச்சியாளரின் முடிந்த முடிபுகள்? காலச் சட்டத்திற்குள் வைத்துப் பார்த்தாலன்றி அவர்களுக்கு ஒன்றும் விளங்குவதில்லை. "இந்தச் சண்டையில் இத்துணைப்படி செந்நீர் பெருகிற்று" என்பர் ஆராய்ச்சியாளர். ஆனால் ஏனாதிநாயனாரும், சீவகனும், இராமனும், செங்குட்டுவனும் நிகழ்த்திய போர்களைக் குறித்துப் பாடத்தக்கார் சேக்கிழாரும், திருத்தக்கதேவரும், கம்பரும், இளங்கோவடிகளுமேயாவர். இப்போர்கள் உலகில் நடந்தனவோ இல்லையோ என்ற ஆராய்ச்சியே வேண்டியதில்லை. அப்புலவர் பெருமக்கள் கூறும் புனைந்துரைவரலாற்றின் உட்போக்காக ஒளிரும் உண்மைகள் எந்நாளும் பொய்யாய்ப்போவன அல்ல. தூய்மை வடிவாம் சிவனெறியில் நின்ற ஏனாதிநாயனாரும், பலவகைச் செல்வத்தோடு மறச்செல்வமும் பெற்ற சீவகனும், அறத்திற்கோ ராளாகிய இராமனும், தமிழ்க்கென வாளேந்திய செங்குட்டுவனும், பாவுலகில் புகழுடம்பு பெற்று எந்நாளும் வாழ்பவர் ஆவர். மெய்யாக வாழ்ந்துலவிய ஏனாதியாரையும், சீவகனையும் இராமனையும் செங்குட்டுவனையும் இவ்வுலகம் மறந்தாலும் சேக்கிழார் முதலியோரின் செல்வப்பிள்ளைகளாகப் பாட்டிலே ஓடியாடி இன்றும் இளமையோடு விளையாடும் ஏனாதிநாயனார் முதலி

யோரை நாம் எந்நாளும் மறக்கமுடியாது. இத்தகைய உண்மைகளையே புலவர் பெருமக்கள் தமது கடவுட்டன்மையால் கண்டெழுதுகின்றனர். கருவிலே திருவுடைய புலவர்களனைவர்க்கும் இத்தகைய கடவுட் காட்சியுண்டு. அவர்கள் முனைப்பற்று இயற்கையன்னையின் மடிமீது தவழ்ந்து, இறைவனோடு ஒன்றாய் நின்று பாடுகின்றார்கள். ஆதலின், அவர்கள் மொழியனைத்தும் திருவருண் மொழியேயாம்.

ஆராய்ச்சிக் கடைகால்:—சேக்கிழார் நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளரில் தலைசிறந்தவர் என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால், அவருடைய திருவருட் சிறப்பும், ஆராய்ச்சித்திறனும் பாட்டாகப் பொங்கி வழிகின்றதென்பதனை நாம் மறத்தலாகாது. இல்லதே கூறினால் மெய்ப்பாடொன்றும் எழுவதில்லை எனக் காட்டுகின்றார் பேராசிரியர். பொருத்தமற்றவையையோ நம்பத்தகாதனவற்றையோ கேட்டபோதும் மெய்ப்பாடொன்றும் எழுவதில்லை. திருவொற்றியூரின் அருகே சீகாழி இருக்கின்றதென்று ஒரு புலவன் பாடினால் அவனுடைய நூலை யாரேனும் ஓதுவாரோ? சிறுத்தொண்டர் இருபதாம் நூற்றாண்டில் புகைக் கப்பலில் ஏறி மேனாட்டாரோடு சண்டையிட்டார் என்று பாடும் புலவனைப் பலரும் பேயன் என்றே புறக்கணிப்பார்கள். ஆகவே பண்டையோர்களைப் பாட வரும் புலவன் நாட்டு வரலாற்றாராய்ச்சி இன்றி அத்துறையில் இழிய இயலாதன்றோ? ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலநாட்டுப் புலவர் பாடிய நூல்களை ஓதும்போது சிற்சில இடத்தே இத்தகைய பிழைகள் கண்டவிடத்து நம்மனத்தெழுந்த மெய்ப்பாடு சிதறுண்டுபோதலை இந்த நாளில் காண்கின்றோம். அத்தகைய ஏமாற்றம் ஒன்றும் சேக்கிழாரை ஓதுகின்றபோது நிகழ்வதில்லை எனலாம். என்றாலும், நாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட புனைந்துரை வரலாற்றையே சேக்கிழார் பாடுகின்றார் என்பதனை நாம் மறத்தலாகாது,

சேக்கிழார் பொய்யரா?:—திருஞானசம்பந்தரும், குலச்சிறையாரும், மங்கையர்க்கரசியாரும் உலகில் உயிரோடு உலவி வாழ்ந்தவர்களே யாவர்; பொய்க்கனா உலகத்துப் பொய்ம்மக்கள் அல்லர். எனினும் அவர்கள் பேசிய பேச்சைச் சேக்கிழார் பாட்டாகப் பாடுகின்றார். அந்தச் சொற்களை அந்த முறையில் அவர்கள் அந்தக் காலத்தில் பயன்படுத்திப் பேசினர் என்று எவரேனும்

கூறமுடியுமோ ? சேக்கிழார் முன்னோர்களுடைய காலத்திலேயே மறைந்திருந்து சுருக்கெழுத்தில் எழுதிக்கொண்டதைப் பின் வந்து பாட்டாகப் பாடுகின்றாரோ ? அவருடைய பாடல்கள் நடந்ததை நடந்தபடி கூறுவன அல்ல. "எவ்வாறு நடந்திருக்கக்கூடும்" என்று தமது கடவுட் புலமையால் கண்டுணர்ந்து பாடிய உண்மைப் பாடல்களே யன்றி மெய்ப்பாடல்கள் அல்ல. ஆகவே புனைந்துரை ததும்பும் இனிய கனியே அவருடைய திருநூல். தமது கருத்திற் கேற்ப வரலாறுகள், ஆராய்ச்சி முடிபுகளுக்கு முரண்படாது உருப்பெற்றெழுவதை இவ்வரலாற்றில் போலத் திருக்கண்ணப்பர் புராணத்திலும் நன்றாகக் காணலாம். சேக்கிழார் பாடும் திருக் கண்ணப்பர் வரலாற்றுக்கும், அவர்க்கு முன்னிருந்த கடவுட் புல வர்களாம் நக்கீரர், கபிலர் முதலியோர் பாடிய வரலாறுகளுக்கும் உள்ள வேற்றுமையை யாவரும் அறிவர். பாலை நிலத்தில் பசியால் வாடி வேட்டையாடி அலையும் திண்ணன்—கண்ணெடுத்துப் பார்க்கவும்கூடாதபடி அருவருக்கத்தக்க வடிவுடைய திண்ணன்— சேக்கிழாருடைய உள்ளத்தே கட்டழகு நிறைந்த முருகனாய், விருந்தும், விழாவும் பொலியும் குறிஞ்சி நிலத்தில் செல்வமும் சீருமாக வளரும் திண்ணனாக மாறுகின்றான். நக்கீரரைக் கடவுட் புலவர் அல்லர் என்போமோ ? சேக்கிழார் அதனைத் திரித்துப் பாடியதால் அவரைப் பொய்யர் என்போமா ? பொய்யையும், மெய்யையும் கடந்த உண்மையுலகில் புனைந்துரை மலையில் பொற் குவட்டில் பாட்டெனும் கோயிலுக்குள்ளே இறைவனும் இவரும் ஒன்றாக இயைந்து இன்ப அன்பு மழை பொழிகின்றனர். வாடி வதங்கிய நமது உள்ளப் பயிர்கள் தழைக்கின்றன. அம்மட்டே இங்குள்ளது. இதற்கு மேல் வேறெங்கேனும் உண்டோ ?

கரும்பைத் தின்பதா? காலில் விழுவதா ?:—அவர் திருநூலை ஓதாது, பூவும், புகையும் கொண்டு வழிபடுவது சேக்கிழாரைப் பழிப்பதேயாம். பாட்டைப் பாடவன்றோ அப்பெரியார் பாடி னார் ? பட்டுத்துணிக்குள் கட்டி வைத்தால் அவர் மனம் பதை யாதோ? மூட்டை கட்டி மூலையில் வைக்கவேண்டும் என்று அவர் விரும்பி இருந்தால் கல்லையோ கட்டையையோ கொடுத்து விட்டுப் போயிருக்கமாட்டாரோ ? கற்கண்டைச் சுவையாது எதிரே வைத்து வழிபடுவார் அதன் இனிமையை அறிவாரோ ? சேக்கிழார் நூலை வழிபடுவார் அதன் பெருமையை அறிவது எங்ஙனம் கூடும் ?

புனேந்துரைக்கூத்து:—எனவே பட்டுப் போர்வையைக் கிழித்தெறிந்து திறந்துவைத்து ஓதுதல் வேண்டும். கீழ்நிலையுலகங்களாம் பொய்யுலகையும் மெய்யுலகையும் ஆராய்ச்சியுலகையும் கடந்து சென்று திருவருளுலகாம் பாட்டுலகத்தே புகுதல்வேண்டும். திருவருள் இவர் காதிலே ஓதுதல் போக சேக்கிழாரே திருவருளாக மாறி நின்று பாடி வீற்றிருக்கும் திருவோலக்கக் காட்சியைக் காணுதல்வேண்டும். இப்பொய்த்திரைகள் கிழிந்தொழிந்தபோதன்றோ புனேந்துரையின் பொன்னம்பலக்கூத்தைக் காண்கின்றோம்! அவ்வின்பக்கூத்தின் பொருள் யாது?

புத்தபகவான் பொருண் மொழிகள்

[பண்டித. திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(முன் கூக-ம் பக்கத் தொடர்ச்சி)

3. மாணவர் கடமைகள்

மாணவர்காள்!

1. ஆசிரி யரைக்கண் டன்புட னெழுமின்.
2. இருகை கூப்பி யிணையடி தொழுமின்.
3. ஏவுகட் டளைக்கே யெதிர்பார்த் திருமின்.
4. காணிக்கை கொடுக்குங் காலந் தவறன்மின்.
5. போதித் திடுநற் பொருண்மொழி போற்றுமின்.

4. ஆசிரியரின் கடமைகள்

ஆசிரியர்காள்!

1. மாணவர் தமைநல் வழியிற் பயிற்றுமின்.
2. உலகறி வனைத்து மொழியா துணர்த்துமின்.
3. இலக்கிய விலக்கண வெழில்பெறச் செய்மின்.
4. காணு விடத்தவர் கல்வியைப் புகழ்மின்.
5. இம்மை மறுமை யிடையூ றகற்றுமின்.

இலக்கணமும் இலக்கியமும்:
Language & Literature

ஊழும் முயற்சியும்

[திரு. S. சகாதேவ முதலியாரவர்கள்]

உலகின்கண் இன்ப துன்பங்கள் எந்நாளுங் காணப்படுகின்றன. மக்கள் இன்பங் காணுங்கால் உவகையுடன் ஏற்று உள் மகிழ்கின்றனர்; துன்பங் காணுங்கால் முனிவெய்தித் துயரில் மூழ்குகின்றனர். ஒருவனுக்கே இன்ப துன்பங்கள் ஒரே காலத்திலும் இடையிட்ட காலங்களிலும் நிகழ்கின்றன. வாழ்நாளெல்லாம் இன்பே கொள்பவனும் அன்றித் துன்பே அடைபவனும் இங்குக் காணப்படுகின்றானில்லை. மேலும், இன்பம் அடையத் தக்கவனென எதிர்பார்க்கப்படுகிறவன் துன்ப மடைதலையும், துன்பமடையத் தக்கவனென எதிர்பார்க்கப்படுகிறவன் இன்ப மடைதலையும் நாம் காண்கின்றோம்.

உலகத்தில், முக்கியமாய் முந்திய நாடென்னும் நம் இந்திய நாட்டில், ஆதிகாலத்தில் வாழ்ந்துவந்த மக்கள் இவ் ஏறுமாறான இன்ப துன்பங்கட்கு இவ்வுலகத்தைப் பொறுத்தமட்டில் எத்தகைய காரணமும் காணமாட்டாதாவர்களாயினர். இப் பொருள் பற்றி நமது பெரியோர்கள் மனம் வெகுகாலம் அமைதியின்றியே அல்லற்பட்டது. அவர்கள் காலஞ் செல்லச் செல்ல ஆழ்ந் தாழ்ந்து ஆராய்ந்து, மக்களது மனச் சஞ்சல மொழிக்க இவ் வின்ப துன்பங்களைப்பற்றி ஒரு முடிவு கட்டிவிட்டனர். அஃதாவது:—

ஆன்மா என்று சொல்லப்பட்ட உயிர் அனாதியானதும் நித்தியமானதுமா யிருக்கின்றது. இவ்வான்மாவுக்கு ஆசைப்பற்றுள்ளவரையில் பிறப் பிறப்புக்கள் தொடர்பாய் உள்ளன. ஒரு பிறப்பிற் செய்த நல்வினை தீவினைகளை அவ்வான்மா அப்பிறப்பில் அநுபவித்தது போக மறு பிறப்பில் அவ்வெச்சத்தின் பயனை அடைந்தே தீரவேண்டும்.

"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனை
யிறுகாலத் தென்னை பரிவு"

என்றார் ஒரு பெரியார்.

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்னும் திருக்குறட்கு "அறத்தின் பயனிதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவு வானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே யுண ரப்படும்" என்று பொருள் கொண்டார்கள் பிற்காலத்து வந்த பரிமேலழகர் முதலாய உரையாசிரியர்கண்மார். ஆகவே இன்ப துன்பங்கள் ஒருவனுக்கு வந்தே தீரும்; அதனை அநுபவித்தே ஆகவேண்டும்; இதனைப்பற்றிக் கவலைப்படுதல் மக்கள்தம் அறியா மையே என்பதாம். நிற்க,

"ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி"

என்ற வள்ளுவர்,

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்றும்,

"மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்"

என்றும், இன்னும்,

"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு"

என்றும் அவரே வாய்மலர்ந்ததன் காரண மென்னோ? மேலும்,

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்"

என்றவர்,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்றதேன்? பிறகு,

“பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம”

என்று சொல்லி

“ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை”

என்றும்,

“ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்”

என்றும்,

“குடியென்னுங் குன்ரு விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்”

என்றும் சொல்வானேன் அவர்? கடைசியாக,

“ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்”

என வற்புறுத்திச் சொற்றவர்,

“ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்”

எனவும் வற்புறுத்திச் சொற்றதன் பெற்றியாது?

இவ்வாறு கண்டவாற்ருல், உலகின்கண் காணப்பட்ட இன்ப துன்பங்களின் ஏறுமாறுகளைக் கண்ட மூதாதையர் அவற்றிற்கோர் சமாதானங் காணவேண்டி ஊழ் என்ப தொன்றுண்டென்று முடிவு கட்டினர் என்றும், அவர்கட்குப்பின் வந்த மக்களெல்லோரும் அம்முடிவையே அடியாகக் கொண்டு அதனை உலக வழக்காற்றிலும் நூல் வழக்காற்றிலும் கொண்டு வந்துவிட்டனர் என்றும், இதற்கு முற்றும் ஒருப்படாத திருக்குறள் ஆசிரியராய நம் திருவள்ளுவ நாயனுர் ‘ஊழ்’ என்பதனை ஒரே அதிகாரத்திற் காட்டி முடித்துக்கொண்டு அதனை முன்னே வைத்துப் பின்னுக, ஊழை யொரு பொருட்டாக எண்ணப்படாதென்று மக்கட்கு வற்புறுத்திக் காட்டுவான் வேண்டி, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை யாகிய, அவ்வூழைப் புறங் காணும் மனவலி யளிக்கத்தக்க இந்நான்கு பொருள்களைக் கொண்ட நான்கு அதிகாரங்களை, ஊழின் பக்கம் உறுதிபூண்டிருந்த மக்கண் மனப்பாங்கை மாற்றி அது முயற்சியின் பக்கமே முறுகித்

திரும்பப் பேரவாக் கொண்டு, பிறர்தம் மத மேற்கொண்டு களைந்து அதனொடு படாஅது தம் மதமே நிறுவ வைத்துக் காட்டினர் என்றும் கண்டாம்.

ஆன்மா அனுதி யென்பதற்கும், அதன் கருத்துச் செயல்களின் பயன் அதனுடனே விடாது செல்லுமென்பதற்கும் நாம் உடன்பட்டுள்ளோம். அக் கருத்துச் செயல்களின் பயனேயன்றி அவைகளே ஆன்மாவின் உடன்செல்லும் என்பது ஒவ்வாத தாகும். மனிதன் ஒரு பிறப்பிற் செய்த ஒருவகைப் பாவத்தினல் மறு பிறப்பில் ஆறறிவிற் குறைந்த விலங்காதிகளாகப் பிறக்கின்ருனென்பதும்; ஒரு பிறப்பில் ஒருவனைக் கொன்றவன் மறு பிறப்பில் மற்றவனுற் கொல்லப்படுவான் என்பதும்; கூத்துப் பார்ப்பவன் கூத்தாடியாய்ப் பிறப்பான் என்பதுமாகிய இவைகளும் இவைபோன்றவைகளும் மூட நம்பிக்கைகளே யாகும். பணக்காரிற் பெரும்பாலார் மெய்யறிவு பெருதவர்களாயும், ஏழைகளிற் பெரும்பாலார் அது பெற்றவர்களாயும் இருக்கக் காண்கின்ருேமன்ருே! எனினும், அவர்களை முற்பிறப்பிற் புண்ணியஞ் செய்தவரென்றும், இவர்களை அது செய்யாதவர்களென்றும் கருதுவது முற்றும் பொருத்தமாகக் காணப்படவில்லை. பணத்தைப் பொருளாகக் கொள்வது உண்மையறிவிற்குப் பொருந்தாததொன்ருகும். ஒருவனது அறிவு முதிர்ச்சி முதிராமைகளுக்குக் காரணம் முற்பிறப்புக்களில் அவனது பயிற்சி முயற்சியின் உண்மையுமின்மையுமே யாகும். ஆகையால் அவன் இப்பிறப்பிலேனுந் தன்னிடமுள்ள குறைவை நிறைக்க முயல வேண்டியதே யன்றி, "நான் இவ்வளவுதான் கொடுத்து வைத்தேன்" என்று சொல்லி முயற்றின்மையை மேற்கொண்டு அவ்வின்மையிலேயே புகுந்து வாளாவிருப்பது அறிவிற்கு வறுமை யாகும்.

ஒருவன் இப்பிறப்பின் கண்ணே அமைந்திருக்கும் நிலைமைக்குக் காரணம் அவன் பிறந்திருக்கும் இடமும் காலமும் அவனைச் சூழ்ந்திருக்கும் மக்களும் அவர்களின் பழக்க வழக்கங்கள் குணகுணங்கள் முதலியவைகளும் முற்பிறப்பின் கருத்துச் செயல்களின் பயனும் எல்லாம் சேர்ந்த தொன்ருகுமே யொழிய அவனது நிலைமைக்கு ஊழ் என்பதொன்றே காரண மென்று நினைப்பது தவறேயாகும். ஒருவன் ஒரு காரியத்தில் முயன்று

அது முற்றுப்பெறுவிட்டால் அஃது அவனுடைய அறிவின் குற்றமும், முயற்சியின் குறைவுமேயாகும். அறிவின் இழுக்கு அவன் அதற்கு முற்பிறப்பிற் கொடுத்த பயிற்சியின் குறைவினலானதென்று சொல்லக்கூடுமாஞலும் அவன் அக்குறைவைக் கல்வி கேள்விகளால் நிரப்பிக்கொள்ளலாம். முற்பிறப்பின் பயனுல் ஒருவனுடைய அறிவு எவ்வளவு குறைவுங் குற்றமு முற்றிருப்பினும் அதனை அவன் அகங்கார மமகாரங்களை ஒழித்து, அறிவிற் றெளிவும் முதிர்ச்சியுமுடைய பெரியோர்கள் சொற்படி அடங்கி நடந்து கொள்வாஞயின் அவன் தொடுக்குந் தொழில்களில் நாளா வட்டத்தி லாயினும் தோல்வியுரு னென்பது திண்ணம்.

ஒரு நாட்டு மக்கள் மற்ளுெரு நாட்டினை ஆட்சி புரிகின்ருர்கள். அதனுல் ஆள்வோருக் கெல்லாம் ஆகூழ் என்றும், ஆளப்படுவோர்க் கெல்லாம் போகூழ் என்றும் சொல்லிக்கொண்டு வாளாவிருத்தல் நன்ருகுமோ? ஆளப்படுவோர் அறிவை வளர்த்திக் கொண்டு தமது நாட்டைத் தாமே ஆள முயற்சி செய்ய வேண்டுமே யொழிய ஊழின்மேற் பழியைச் சுமத்தி, அன்பின்மை, நடுநிலை யின்மை, அடக்கமின்மை, அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறல், கூடாவொழுக்கம், கள்ளற்றன்மை, பொய்ம்மை, கொடுமை, கல்லாமை முதலிய இழிவுகளையும், குறைபாடுகளையும் மேற்கொள்ளாது, ஒற்றுமையை தத்துவமாகக் கொள்வார்களாயின் அந்நாட்டின் மனத்தை ஆட்சிசெய்துகொண்டு வந்த ஊழிற்குக் கடையூழி யன்ருே கடுகக் கிட்டும்! மக்களது ஊக்கமின்மை, மடியுண்மை, ஆள்வினையின்மை, இடுக்கணழிதல் முதலாகிய குற்றங்களினுலன்ருே ஊழானது பெருவலி பெற்று முந்துகின்றது! மடுத்தவாயெல்லாம் பகடன்ஞனிடம் ஊழானது இடுக்கட்பட்டு இடர்ப்படுமன்ருே!

உலகின்கண் பல்வேறு தொழில்கள் காணப்படுவதுபோல மக்களறிவும் பலதிறப்பட்டிருக்கின்றது. ஒருவனுக்கே எல்லா வகை அறிவும் பொருந்தியிருப்பது அருமையே. எவனெவனுக்கு எவ்வெத்தொழிலில் அறிவு செல்கின்றதோ அவனவன் அவ்வத் தொழிலை மேற்கொள்ளவேண்டும். ஓவியத்தில் அறிவு செல்லும் ஒருவனை இலக்கிய இலக்கணப் பண்டிதனுக்க முயலுதலும், உழவுத்தொழிலில் ஊக்கமுடைய ஒருவனை உத்தியோகத்தில்

வைக்க ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்புதலும், ஏவுதொழில் செய்யவே சிற்றறிவுடைய ஒருவனை எஜமானனாக்கி வைத்தலும், அவர்கள் அத்தொழில்களில் இடர்ப்பாடுற்றால் அஃது ஊழ் என்பதும், அடாததொன்றே யாகும். உயர் குடியிற் பிறந்த பிள்ளைகள் இழி தொழில்களில் இறங்கிவிடுவதும், மனைத்தக்க மாண்புடைய பெண்ணை ஆய்ந்தாய்ந்து கொள்ளாது அதனைத் தீராத்துயரில் ஆழ்த்துவதும், அளவறிந்து அழித்துண்ணாது கடன்பட்டுக் கலுழ்தலும் முதலாகிய பாழ்படு செயல்களெல்லாம் ஊழ்படுவனவா மென்பது ஆழ்படு அறிவின்மையே யாகும்.

சிவிகைமேற் செல்பவன் பெருவாழ்வும், பேரின்பமும் உடையான் என்பதும், அச்சிவிகையைக் காவுவோன் அற்ப வாழ்க்கையும், ஆழ் துயரு முற்றவனென்பதும் அறிவின் மயக்கே. கூழுக்கு உப்பில்லை என்பானும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பானும் ஒருதன்மையர்களே. குடிசையிலுள்ள குறவனுக்கும், மாளிகையிலுள்ள மகாராஜனுக்கும் உள்ள இன்ப துன்பங்களை அவரவர் நிலையிலிருந்து நடுநிலையிலுள்ளான் ஒருவன் ஆராய்ந்து தூக்கிப் பார்க்கும்போது அவை ஏற்றத்தாழ்வு இன்றியே காணப்படும். நுண்ணிய ஆராய்ச்சியின் பயன் இவ்வாறிருக்க ஊழ், ஊழ் என்று மக்கள் மனந்தடுமாறுவானேன்?

"வெள்ளத் தனைய இடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்"

என்பதைமேற்கொண்டு மக்கள் யாவரும் "நமது ஊழ் முயற்சியே" என்று உறுதி கொண்டு வென்றாலும் தோற்றாலும் மனத் தளர்ச்சியடையாமல் மேலும் மேலும் அறிவை வளர்க்கவேண்டும்.

"வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது"

ஆகையால், ஊழினிடம் நமக்கு ஒரு வேலையும் இல்லை. அதனைக் கனவிலும் நினைக்கவேண்டியது இன்று; ஆனால்,

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்பதே நமது கடைப்பிடி.

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(11-ம் சிலம்பு உகூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் உடலிற்கும் உயிருக்கு மிருக்கும் புணர்ச்சியை உபமானமாகக் கொண்டதன்றி, தன்னை உடலாகவும், தன் காதலியை உயிராகவும் உபமானித்ததால் அக்காதலியாகிய உயிர் இன்றேல் உடலாகிய தான் இயங்கேன், அதாவது மரித்துப் போவேன், எனவும் கூறப்பட்டது.

மெய்யுடன் உயிரொன்று மியல்பு இவ்வுயிர் மெய்யெழுத்துக் களுக்குமன்றி, மெய்யீற்றுச் சொல்லும் உயிர் முதல் மொழியும் அடுத்தடுத்து வருங்காலும் அம்மெய்யும் உயிரும் சேர்ந்தே வொலிக்கும். உதாரணம்:- அவனும் + இவனும் = அவனுமிவனும். அதாவது நிலைமொழி யீற்றிலிருக்கும் மகர வொற்று வருமொழி யின் முதலிலுள்ள இகர உயிருடன் புணர்ந்து மி என ஒலித்தது. இத்தன்மையை "புள்ளியீற்று முன்னுயிர் தனித்தியலாது மெய் யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே" என்னும் சூத்திரம் விளக்கியது. (தொல். புணர்)

மெய்யொடு உயிர்புணர்ந்து உயிர்மெய்யா யியலுந் தன் மையைப் பின்வரும் விதி விளக்கியது.

"புள்ளி விட்டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனையுயிரொடு ருவுதிரிந்தும்
உயிரளவாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரு முயிர்மெய்"

(பவண. எழு. சூ 34)

(இ. பொ.) ஒரு மெய் அகரத்தோடு முன்னுருவே யாகியும், ஒழிந்த உயிர்களோடு உருவு வேறுபட்டும், சேர்ந்த உயிரினளபா யொலித்தும், உயிரின் வடிவத்தை மறைத்து இரண்டின் பெய ரோடும், உச்சரிக்குங்கால் ஒற்று முன்னதா யொலிக்குந் தன்மை யுடனும் வருவது உயிர்மெய்.

இவ்வாற்றால், ஈரெழுத்துக்களின் ஒலியைக் குறிக்க ஓர் எழுத்தாய் நிலைவதும், இந்நிலையினால் ஓரொலியையே உணர்த்து வதும் இவ்வுயிர்மெய்களின் தன்மையும் சிறப்புமாம். எவ்வா றெனின் ஆங்கிலத்தில் k × a என்பதை க எனவும் k × i என் பதை = கி எனவும் ஓரொலியை ஈரெழுத்துக்களா லுணர்த்து வதைத் தவிர்த்தும், l × y என்பதை லி எனவும் லை எனவும்

ஒரே ஈரெழுத்துக்கள் பல ஒலியைத் தராமலும் ஒரெழுத்திற்கு ஓர் ஒலியாய் நிலவதும் இவ்வுயிர் மெய்களின் பயனும் சிறப்புமாம்.

English Consonants

[Guide to the English Language p. 26 etc.]

Below is a list of the sounds of modern English with examples of words in which each occurs. It will be noticed that the same sound is very often spelt in a number of different ways and that the same letter sometimes represents a number of different sounds. In order to prevent confusion it is necessary to have a special symbol for each particular sound, and to use it for no other.

Sound			*Words in which it occurs*
1 P	Labial	[voiceless]	Pass
2 B		[voiced]	Bar
3 T	Dental	[voiceless]	It
4 D		[voiced]	Day
5 K	Guttural	[voiceless]	King
6 G		[voiced]	Go
7 W	Semi vowel		Win, One
8 F	Fricatives		Fan, Enough
9 V			Very, Of
10 R	Vibrant		Red
11 S	Sibilant		Sit, City, Ice
12 Z			Zebra, Is, Dogs
13 L	Liquid		Long, Fill
14 M	Nasal		Man
15 N			Now
16 H	Aspirate		Horse

In addition to the above, there are the following Consonants which have special symbols. It will be noticed that the symbols 17 and 18 are taken from old English, where, however, they are used without consistency for both the sounds here distinguished. (தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

சோழர்கள் கல்வெட்டுகளிற் கண்ட சில குறிப்புக்கள்

[இராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள்]

(முன் எகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விதச் சுங்கங்களில் சிற்றுயம் என்பது சிறுபொருள் களின்மீது வாங்கப்பட்ட குறைவான தீர்வையாகும். அல்லது அதிகமாக செலாவணியாகாத நுண்மைப் பொருள்களின்மீது விதித்த சிறு தொகை கொண்ட சுங்கமாக இருக்கும். இவ்விதச் சிற்றுயம் எவ்விதப் பொருள்களின்மீது விதிக்கப்பட்டது என்ப தையும், எக்காலத்தில் விதிக்கப்பட்டது என்பதையும், நாம் அறி வதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

4. எலவை :—இப்பெயருக்கு என்ன பொருள் என்பது தெரியாதவராய்ச் சாசன பரிசோதகர் எலவை என்றே ஆங்கிலத் திலும் எழுதிவிட்டார். இப்பெயர் ஒரு வகையான தீர்வையா யிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அஃது எவ்வகைத் தீர்வை என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. பழையகாலத்து அம் மானைப் பாடல்களில் சோழர்களுக்குக் குறுநிலமன்னர்கள் செலுத்தும் வரிகள் குறிக்கப்பட்டுள்ளன. கள்ளழகர் அம்மானை என்ற நூலில் சோழனுக்குப் பொன்னழகர் பாதி காவல் பணமும்* பகுதிப்பணமும் உலுப்பையுடனே செலுத்தச் சென் றூர் என்று கண்டிருக்கிறது. இதில் † உலுப்பை என்பது எலவை, உகவை என்ற பதங்களின் திரிபு ஆக இருக்கலாம். இஃது ஒருவகைப் பகுதிப்பணம் அல்லது கடமைப்பாடு ஆக இருக்கலாம்.

---

* இஃது 'பாடி காவற்பணமும்' என்று இருத்தல் வேண்டும் போலும்.

† உலுப்பை என்பது இக்காலத்திலும் பெரும் பொங்கற் புது நாளன்று பண்ணையாட்களினால் பண்ணைக்காரருக்குச் செலுத்தப்படும் காய் கறி வகைகள் நெய் தேங்காய் முதலியவற்றிற்குப் பெயராக வழங்கு கிறது. —கா. சிவ. க.

5. உகை :—இதற்குஞ் சாசனப் பரிசோதகர் ஆங்கில மொழி எழுதவில்லே. இதனுடைய பொருளும் சரியானபடி விளங்கவில்லை. இதற்கும் மேலே எலவைக்குக் குறித்த விரிவுரையே பொருந்தும்.

6. மன்று பாடு:—இது மற்ருெரு சாசனத்தில் 'மன்று பாடல்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. சாசன பரிசோதகர் இதனையும் இதற்கு அடுத்த தெண்டம், குற்றம் என்பவைகளையும் சேர்த்து 'மூன்று அபராதங்கள்' என்று சொல்லியிருக்கின்ருர். ஆனல் இதைப்பற்றி எழுதின K. V. சுப்பிரமணி ஐயர் அவர்கள் தம் பழைய தக்ஷண சரித்திரம் (Historical Sketches of Ancient Deccan) என்னும் நூலில் "மன்றுபாடு," "சபாவினியோகம்" என்ற இரண்டு பதங்களையும் ஒன்று சேர்த்து அவைகளுக்குக் கிராமச் சபைகளை வைத்து நடத்துவதற்காகக் கொடுக்கும் பங்கு என்று பொருள்படுத்தி யிருக்கிருர்.

மன்று என்ருல் பொதுச்சபை என்று பொருள். முன் காலத்தில் கிராமங்களில் ஊருக்குப் பொதுவான மரத்தடியில் கிராமத்தார் சபை கூடி வழக்குகளைத் தீர்ப்பதுண்டு. அவ்விதச் சபைக்கு மன்று அல்லது மன்றம் என்று பெயர். அச் சபைகளில் தலைமை வகிப்பவர்களுக்கு மன்ருடி என்ற பெயருண்டு. இப்பொழுது இதனைப் பட்டப் பெயராகச் சிலர் வைத்துக்கொண்டு இருப்பதை நாம் அறிவோம். கொங்கு நாட்டில் பழையகோட்டை பட்டக்காரரும் புரவிப்பாளையம் ஜமீன்தாரும் மன்ருடியார் என்ற பட்டத்தை வகித்திருப்பதும், சேர நாடாகிய பாலக்காட்டுக்கு அருகில் வடச்சேரி குடும்பத்தினர்கள் மன்ருடியார் (மன்னுடியார்) என்ற பெயரை வகித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. மன்றம் என்ற பெயரை மன்னம் என்று மலையாளத்தில் இப்போதும் வழங்குகிருர்கள். இவ்விதம் ஊர்ப் பொதுவாக நடந்துவந்த சபைகளுக்கு அச்சபைகளை நடத்துவதற்காக, வழக்குக் கொண்டுவருபவர்களிடம் ஒருவிதக் கட்டணம் வாங்கி வந்தார்கள். இப்போதும் வகுப்புக் கூட்டங்களில் இருதிறத்தினர்களிடமிருந்தும் இவ்விதக் கட்டணம் வாங்குவதுண்டு. இதைத்தான் மன்றுபாடு என்று அக் காலத்தில் வழங்கி இருக்கலாம். இதற்குச் சமமாக இப்போது வழங்குவது Court fees என்ற கட்டணம் என்று சொல்லலாம். (பெரிய புராணத்தில் சுந்தாரை வழக்குக்கு இழுத்த கிழவரைப்

“பழைய மன்றுடி போலும்” என்று சுட்டிக் காட்டியது அறியத்தக்கது ஆகும்.)

7. தெண்டம்:—இதனையும் சாசனப் பரிசோதகர் அபாரதம் (fine) என்கிறார். மேலே காட்டிய மன்றம் என்ற ஊர்ச்சபைகளில் எக்கட்சியாராவது தப்புச் செய்தவர்களென்று சபையோர்கள் முடிவுசெய்தால், அவர்கள் ஒரு தொகையைக் குறிப்பிட்டு அதனைக் கட்டிவிடவேண்டுமென்று தீர்மானித்து விடுவார்கள். இவ்வகைத் தெண்டங்கள் இக்காலத்திலும்கூட வகுப்புச் சபைகளில் சாட்டிவிடுவது வழக்கம்.

8. குற்றம்:—இதனையும் சாசனப் பரிசோதகர் அபாரதம் என்ற வகுப்பில் சேர்த்திருக்கின்றார். இதுவும் தெண்டத்தைப் போன்றதொன்றாகும். இப்போதும், வகுப்புக் கூட்டங்களில் வகுப்பொழுக்கத்திற்கு மீறினவர்களை விசாரித்து அவர்கள் குற்றம் செய்தவர்களாய் ஏற்பட்டால் அவர்களிடமிருந்து ஜாதிக் குற்றம் என்ற ஓர் அபாரதத்தை விதித்து வாங்குவதுண்டு. இதைப்போலவே முன்காலத்திலும் மற்றச் செய்கைகளிலும் நாட்டில் வழங்கி வந்த விதிகளுக்கு மாறாக நடந்துவந்த ஜனங்களைத் தண்டித்து வாங்கின அபாரதத்திற்குக் குற்றம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஆகவே மேற்சொல்லிய எட்டுவகை வருமானங்களும் சோழர்கள் காலத்தில் விதிக்கப்பட்டு வந்தன என்று அறியலாம். நாட்டின் பாதுகாப்புகருதி அவசியமாகச் செய்யவேண்டிய செலவுகளுக்காக அக்காலத்தில் விதித்த வரிகளையும் மற்ற வருவாய்களையும் எட்டு விதமாகப் பிரித்துக் காட்டியிருப்பது நோக்கத் தக்கதாகும். இவைகளையன்றிக் குலோத்துங்கச் சோழனது மற்றொரு கல்வெட்டில் “இந் நிலத்தால்வந்த இறை, வரி, சிற்றாயம், எறச்சோறு கூற்றரிசி எப்பேர்ப்பட்டனவும்” என்ற பதங்கள் பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் பூமியிலிருந்து அரசாங்கத்திற்கு வரும் வருமான வகைகளில் இறை, வரி, சிற்றாயம் என்பவைகளோடு எறச்சோறு, கூற்றரிசி என்பவையும் சேர்க்கப் பட்டிருப்பதை அறியலாம். சாசனப் பரிசோதகர் “எறச்சோறு” என்பதற்குப் பொருள் விளங்காமல் விட்டுவிட்டார். “கூற்றரிசி” என்பதை Pounded Rice due from the land என்று பொருள் படுத்துகிறார். அது கூத்தரிசி என்றும் காணப்படுகிறது என்று

சொல்லுகிறார். அது குத்தின அல்லது புடைத்த அரிசியாம். ஒவ்வொரு நிலத்திலும் விளைந்த நெல்லின் ஒரு (கூற்றைப்) பாகத்தைப் பிரித்து அதனைக் குத்தி அரிசியாக்கிக் கொடுப்பது வழக்கம் என்று இதனால் அறிய வேண்டியிருக்கிறது. இது தனியாக ஒரு வரியாகுமோ அல்லது ஆலயங்களுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு முறைமையோ தெரியவில்லை. (தொடரும்)

திருச்சி மலைக்கோயில்

மௌனசுவாமி மடத்து விபரங்கள்

(முன் அரு-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷை ௩-வது பட்டத்தில் நாயக்காவர்கள் அரண்மனையில் பொக்கிஷம் வேலை கம்மாளனால் சிவன் ராத்திரி நாலாம் சாமத்தில் அபிஷேக நைவேத்தியம் நடப்பிவைத்துக் கொண்டு வரும்படிக்கித் திட்டம் செய்து வைத்து ஷை சிலவுக்காக தென்னூரில்...பிள்ளையார் கோட்டை வாசல் நிலத்தில் தாதன் செய் க—ஆண்டி செய் க—இவ்விரண்டு செய்யும் வீதிவடங்கன் செய் உ இயும் ஆக செய் ச இயிலும் வரப்பட்ட வருமானத்தைக் கொண்டு சிவன் ராத்திரி நாலாம் சாமம் அபிஷேக நைவேத்தியத்துக்காக கம்மாளனால் விடப்பட்டது தென்னூரில் செய் உ. வீதி விடங்கனில் செய் ௨- இ

மூன்றாவது பட்டம் நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள் மாரிபத்தில் உண்டாகிய ஊதிபங்கள், கள்ளிக்குடி, கீழ் மாரிமங்கலம் திருத்தவத்துறை பட்டவர்த்தி, கொழுக் கட்டகுடி, கொட்டப்பட்டி, நாச்சிக்குரிச்சி, வீர சுர தோட்டம், உய்யக் கொண்டாங் தோட்டம், மருதாண்டக்குரிச்சி பட்டவர்த்தி, திருத்தாங் தோணி பட்டவர்த்தி, வீதிவிடங்கன் பட்டவர்த்தி, இந்த ஊதிபங்களெல்லாம் நமச்சிவாயத் தம்பிரான் நாளையிலுண்டாகிய ஊதிபங்கள்.

ஷை நமச்சிவாயத் தம்பிரான் சுவாமியவர்கள் செய்த திருப்பணிகள், அம்மன் கோவில் முன் பள்ளமா யிருந்ததை உயர்த்தி முழுமையும்...சிலைபோல் வேலை செய்தும், நவராத்திரி மண்டபமும், சித்திரை மண்டபமும் இந்தத் திருப்பணிகளெல்லாம் நமசிவாயத் தம்பிரான் சுவாமி யவர்கள் காலத்தில் நடந்தது.

சித்திரை மண்டபம் வேலைக்குத் துறையூர் ரெட்டியாரவர்களிடம் திருப்பணி செலவுக்குப் பணம் வாங்கி, திருப்பணி வேலை முடித்து ஷை...மலையில் தென்புர மதிளில் ஷை ரெட்டியாரவர்களையும் தளவாயையும் திருவுருச் செய்து வைத்திருக்கிறது. ஷை ரெட்டியாரவர்களை வரவழைத்து ஷை திருப்பணிகளெல்லாம் காண்பிவித்து, இதுகளெல்லாம் தங்களுடைய தருமமென்று சொன்னதின்பேரில் ரெட்டியார் ரெம்ப சந்தோஷப்பட்டு அப்போது பண்ணைவட்டம் பாதி காவலுக்கு நடக்கப்பட்ட நிலங்களில் கள்ளிக்குடியில் நஞ்சை செய் மகூம் அதைச்சேர்ந்த புஞ்சையும் திருத்தவத்துறையில் நஞ்சை செய் நவ-ம் விடப்பட்டது.

சாலிவாகன சகாப்த்தம் கூகூளஎன் அக்ஷய ஸூ வைகாசிமீ முதல் கூளமருன் யுவஸூ சித்திரைமீ நாலாவது தில்லை நாயகத் தம்பிரான் பட்டம். இது ஷையார் பட்டத்தில் ஊதிபங்கள் ஒன்றுங் கிடையாது. திருப்பணி முதலானதுங் கிடையாது.

சாலிய வாகன சகாப்த்தம் கூமருன் யுவஸூ சித்திரைமீ முதல் கூளநஎன் துன்முகிஸூ ஆனிமீ மங்கம்மாள் இராஜரீகத்தில் ருவது சிதம்பரநாதத் தம்பிரான் சுவாமியவர்கள் பட்டம் ஸூ உமஉ.

திருமங்கலம் கிராமத்தில் பண்டாரவாடை பங்கு 16ல் பண்டாரவாடை அல் பாக்கி பங்கு அம்பேரைய்யன், ராமய்யன், சாஸ்திரியார் வகையாா பங்கு நாலும் தாயுமான சுவாமிக்குப் பூசை கட்டளைக்கு என்று தத்தம் பண்ணி அதுமுதல் கும்பினி சப்தியாகிற வரையிலும்...பத்தாயிருந்ததினாலே மேல்வாரம் சர்க்காருக்குப் போக குடிவாரத்தில் உளவடை சுவந்திரம் முதலியதும், கொடுத்து, மீதி ஐவேசியைக்கொண்டு சுவாமிக்கு அபிஷேகம் நைவேத்தியம் நடப்பிவைத்துக் கொண்டு வருகையில் கும்பினி சப்தியானதின்பேரில் தாயுமான சுவாமி பேரால் பட்டா கோசம் ஏற்பட்டு அதன்பேரில் கோவில்ப் பண்ணையாக வைத்துக் கொண்டு சர்க்கார் கெஸ்தி செலுத்தி வைத்து மற்ற அய்வேசு முழுவதும் மடத்தில் வந்து சேர்ந்து சுவாமிக்குக் கிரமமாய் அபிஷேக நைவேத்தியம் நடப்பி வைத்துக்கொண்டு வந்தார்கள்.

ஷை ருவது பட்டத்தில் மங்கம்மாளிடத்திலிருந்த கத்திக் கோபால் ராஜா என்பவர் மங்கம்மாளிடத்தில் கேட்டு சர்வ மானியமாக பொத்தம்பட்டி கிராமம் வாங்கி தாயுமான சுவாமி

யின் பூசைக்கட்டளைக்காக விடப்பட்டது என்று கிராமத்தில் ஷெயார் போல் சிலா சாசனமும் போட்டுக் கொடுத்து தம்பிரானிடத்தில் தாம்பிர சாசனம் செய்து கொடுத்து தாயுமான சுவாமிக்குப் பூசை கட்டளைக்குக் கத்தி கோபால் ராஜாவால் விடப்பட்டது பொத்தம்பட்டி கிராமம்.

ஷெ மங்கம்மாள் ராஜரீகத்தில் ஷெ ரு-வது பட்டம் சிதம்பரநாதத் தம்பிரான் சுவாமி யவர்கள் மாரிபமாய் மேலேத்துவாக்குடி நாட்டார்கள் ஷெயார் போல் பத்துக்கட்டாயிருந்த கிராமங்களில் தேனேரிப்பட்டிக் கிராமம் க—உழுந்துணி கிராமம் க—பூவாங்குடி கிராமம் க—இந்த கிராமங்கள் மூன்றையும் தாயுமான சுவாமியின் பூசைக் கட்டளை அபிஷேக நைவேத்தியத்துக்காக மங்கம்மாளிடத்தில் கேட்டு வாங்கி மேலத்துவாக்குடி நாட்டாரவர்களால் விடப்பட்டது தேனேறிப்பட்டி, உழுந்துணி பூவாங்குடி.

ஆக ரு-வது பட்டம் சிதம்பரநாதத் தம்பிரானவர்கள் காலையில் உண்டாகிய ஊதிபங்கள்—திருமங்கலம் பங்கு ௨-ம் பொத்தப்பட்டி கிராமம் க-ம் தேனேறிப்பட்டி கிராமம் க-ம் உழுந்துணி கிராமம் க-ம் ஆகக் கிராமம் ௪.

ஷெ பட்டத்தில் கோவில் திருமதில் வடபுறத்தில் வரிகளில் நழுகியிந்ததைப் பற்றி ஷெ மதிலுக்கு ஆதாரமாக வடக்கு வீதியில் பூமியிலிருந்து திம்மிகட்டி அந்தத் திம்மியில் தீர்த்தகொட்டி வரைக்கும் வெகு பணங்களை செலவு செய்து அரிதான திருப்பணி செய்தது.

சாலியவாகன சகாப்தம் கசூாஙஎ-ன் துன்முகி ஷு ஆடி மீ முதல் கசூாஎஅ-ன் வெகுதானிய வருஷம் ஆவணி மீ:—

சூ-வது அருணசலத் தம்பிரான் பட்டம் ஷு க. ஷெ யார் பட்டத்தில் வருமானங்கள் பூச்சியம் திருப்பணிகள் முதலாகியது ஒன்றும் கிடையாது.

நவாபு சாயபு ராஜரீகத்தில் எ-வது பட்டம் வைத்திலிங்கத் தம்பிரான் சுவாமி யவர்கள் சாலிவாகன சகாப்தம் கசூஎசூ-ன் மேல் செல்லா நின்ற வெகுதானிய ஷு அற்பிசை மீ முதல் களாஉஉ ஷுத்திய துந்திமி ஷு புரட்டாசி மீ ஷு சம்சூ

(தொடரும்)

அறிவியற் பகுதி—Science

ஒளிநூல்—(Astronomy)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்]

(முன் அகடு-ம் பக்கத் தொடர்ச்சி)

டாலமிக்குப்பின் அரேபியர் காலம்வரை அலெக்சான்டிரியா விற் பிறந்த தீயான் என்பவரைத் தவிர சிறந்த புலவரொருவரும் தோன்றிலர். கி. பி. 395-ல் டாலமியின் பெருநூலுக்குத் தீயான் அழகுபெற விரிவுரை எழுதியிருக்கிறார்.

அரேபியருள் ஒப்புயர்வற்ற வானநூற்புலவர் பலர் இருந் திருக்கின்றனர். ஏனைய துறைகளிலும் ஒளிநூற்றுறையில் அவர்கள் மிகவும் ஈடுபட்டு அருப்பாடு பட்டதே அதற்குக் காரணம். ஆதலின் அவர்களைப் போல ஒளிக்கலைப் புதுமைகள் எண்ணிறந்தன கண்டுபிடித்தோர் மிகச் சிலரே. அவர்களுடைய மன்னரும் அத்துறையில் ஆழ்ந்த அறிவுடையவராக இருந்ததோடு அதனை வளர்ப்பதிலும் மிக முனைந்து நின்றனர். இரவி வீதியின் சரிவைப்பற்றி டாலமி கூறியது சற்று அதிகமாக இருப்பதைக் கண்டு அவர்கள் பலவாறு முயன்று அதனைச் சரியாகக் கண்டு பிடித்தார்கள். அஃது இக்காலப் புலவர்கள் கூறுவதை மிக ஒத் திருக்கிறது.

வெற்றிமாலையன் அல்மான்சர் என்ற அரசர் ஒளிநூற் புலவருள் முதன்மையாக வைத்து எண்ணத் தகுந்தவாறு அவ் வளவு விரிந்த ஆராய்ச்சியுடையவர். அவர் கி. பி. 754-ல் பட் டத்திற்கு வந்தார். அவருடைய பேரனே பெரும் புகழ்பெற்ற ஹாரௌன் என்பவர். ஹாரௌன் கி. பி. 786 முதல் 809 வரை செங்கோலோச்சினர். அவர் ஒரு நீர்க்கடிகாரத்தைச் செய்து சார்லிமேனுக்கு (Charlemagne)ப் பரிசாக அனுப்பினர். அக் கடிகாரம் அக்காலத்தில் ஐரோப்பா முழுவதையும் வியப்புக் கட லுள் ஆழ்த்தியது. அதன் மேற்பகுதியில் பன்னிரண்டு சிறு கதவு கள் இருந்தன. அவை பன்னிரண்டு மணிகளையும் அறிவுறுத்தின.

ஒவ்வொரு கதவும் தான் குறித்த மணிநேரம் வந்ததும் திடீரெனத் திறக்கும். உடனே உள்ளிருந்து சில சிறு உருண்டைகள் வெளிவந்து பக்கத்திலிருந்த பித்தளை மணிமேல் விழுந்து குறித்த மணியை அடித்தன. திறந்த கதவுகள் பன்னிரண்டுமணி ஆகும் வரை திறந்தே இருக்கும். பன்னிரண்டடித்தவுடன் குதிரைமீதேறிய பன்னிரண்டு சிறு வீரர்கள் தோன்றி அதனைச் சுற்றி வந்து அக்கதவுகளை அடைத்து விடுவார்கள்.

ஹாரௌனுக்குப் பின் அவர் மகன் அல்மைமான் அரசாயினார். அவரும் சோதிநூற்கலையைப் பெரிதும் பேணி வளர்த்தார். அவர் காலத்தில் பேர்பெற்ற கணிகள் பலர் வாழ்ந்துவந்தனர். அவருள் அல்பிராகன் என்பவர் பல கணித நூல்கள் இயற்றி "கணி" என்ற பட்டத்தைப் பெற்றார்.

மிக மேலான அரேபியப் புலவருள் அல்பாடேனி என்பவரும் ஒருவர். அவர் ஆண்டின் அளவை நுணுகிக் கண்டறிந்தார். அவர் அப்போது கண்டறிந்த அளவு அதற்கு அறுநூறு ஆண்டுகளின் பின் டாக்டர் ஹால்லே என்பவர் கண்டறிந்ததினும் இரண்டு விநாடிகளே குறைந்திருக்கிறது.

கி. பி. 1020-ல் அரேபியர் ஸ்பெயின் (Spain) நாட்டினைப் படை கொண்டு சென்று வென்றபோது, அந்நாட்டில் பல ஆராய்ச்சிச்சாலைகளை நிறுவினார்கள். அங்கே ஆராய்ச்சி செய்தவருள் ஒருவராகிய அல்ஹேசன் என்பவர் கண்ணூல் (Optics) ஒன்று எழுதியிருக்கிறார். இந்நாளில் நிலைநாட்டப்பெற்று வழங்கிவருகிற எதிர்ஒளி (refraction), இரவும் பகலும் சந்திக்கும்போதுள்ள சந்தி வெளிச்சம் (twilight) ஆகிய கோட்பாடுகளை அந் நூலில் அவர் விளங்கக் கூறுகிறார்.

பாரசீகருள்ளும் பல பெரும் சோதி நூற்புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஆண்டின் அளவை வரையறுப்பதில் அரும்பாடுபட்டு அதனை முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் ஆறு மணிகளும் என வரையறுத்தார்கள். அவர்களுள் முதன்மையானவர் பெரும் புகழ்பெற்ற தாமர்லேன் (Tamerlane) என்பவருக்குப் பேரனாகிய உலூக்பெக் Ulugh Beg என்ற அரசரே. அவர் அரசராகிய தமக்குரிய கடமையின்படி பலகலைகளையும் வளர்த்து வந்ததோடு தாமும் அவைகளில் விரிந்த அறிவையுடையவராகத் திகழ்ந்தார். அவர் தமது தலைநகராகிய சமர்கண்ட்

(Samarcand) என்ற பேரூரின் வடதென் சமகோட்டினை (Latitude)க் கண்டுபிடிப்பதற்காகப் பெரு முயற்சி செய்தார். அவர் விண்மீன்களின் அட்டவணை யொன்று எழுதிவைத்திருப்ப தோடு, அக்காலத்தில் பிழையற்றனவெனத் தீர்மானிக்கப்பெற்ற பல கணித வழிகளின் குறிப்பையும் இயற்றினர். அவர் தமது மகனால் கொல்லப்பட்டார்.

கி. பி. 800 முதல் பதினான்காம் நூற்றாண்டின் முடிவுவரை ஐரோப்பா முழுவதும் அறியாமை யிருளில் மூழ்கிக்கிடந்தது. ஸ்பெயின் நாட்டிற் குடியேறிய அரேபியர்மட்டும் வாளா இருந்திலர். அலெக்சான்டிரிய நகரத்து அழிந்துபோன நூல்நிலையத்திலிருந்து தாம் கைப்பற்றிவந்த நூல்களைத் துணையாக வைத்துக் கொண்டு பல கலைகளிலும், முக்கியமாக வானநூற்கலையில், அவர்கள் நுட்பமான ஆராய்ச்சிகளைப் புரிந்து வந்தனர்.

கி. பி. 1423-ல் பர்பாகியஸ் (Purbachius) என்ற அறிஞர் தோன்றினர். அவர் நுண்ணறிவிற் சிறந்தவர். அவர் டாலமியின் பெருநூலுக்கு ஒரு சுருக்கம் செய்யத் தொடங்கினர். அது முடிவதற்குள் அவர் இறந்துபோனர். அதனை அவருடைய மாணவராகிய ஜான் முல்லர் என்பவர் எழுதிமுடித்தார். அவர் பல உண்மைகளைக் கண்டுபிடித்ததோடு பண்டைக்கால வானநூற் புலவர் எழுதிய நூல்களையெல்லாம் திரட்டினர். அவர் முன்னர்க் கூட்டியே முப்பதாண்டுகளுக்குப் பஞ்சாங்கம் வெளிப்படுத்தினர்; கோள்களையும் வால் வெள்ளிகளையும் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதினர். அப் புலவர் கி. பி. 1476-ல் இறந்தனர்.

அவருக்குப்பின், கி. பி. 1473-ல் பிறந்தவராகிய நிக்கோலாஸ் கோப்பர்நிக்கஸ் என்பார் பேரும் புகழும்பெற்று முன்னணியில் வந்தார். அவர் நிலைநாட்டிய சோதிக்கலைக் கொள்கைகள் இன்றும் அவர் பெயரால் "கோப்பர்நிக்கஸ் முறை" என்று அழைக்கப் பெறுகின்றன. பிதாகோராஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டு டாலமி காலமுதல் மறைந்து கிடந்த பழைய கணிதநூல் முறைகளை அவர் எடுத்துரைத்தார். அவர் கூறிய காரணங்கள் மிகப் பொருத்தமா யிருந்தபடியால் டாலமிமுறையின் தவறுகள் உலகினருக்குத் தெளிவுறுவன வாயின. தாம் புகன்றவற்றுள் இருந்த பிழைகளையும் அவர் நாளடைவில் திருத்திக்கொண்டார். அவர்

இடைவிடாது பண்டைக்கால ஆசிரியரது நூல்களை ஆழ்ந்து கற்பதும் அவைகளிற் கூறியுள்ள உண்மைகளை நேரில் காண முயலுவதுமாகச் செய்த பெருமுயற்சியின் பயனாக அவர் நிறுவிய முறையானது இந்நாளில் உண்மையென உலகினர் கொள்ளும் முறையாக விளங்கி வருகின்றது. அவரது சிறந்த முதன்மையான கணிதநூல் கி. பி. 1543-ல் ஸ்கூனர், ஆசியான்டர் என்ற இருவர் முயற்சியால் அச்சேறியது. அவ்வாண்டில் மே மாதம் 23உ தமது எழுபதாவது வயதில் அவர் இறந்தார்; தாம் இறப்பதற்குச் சில மணிநேரங்களுக்கு முன்னர்தான் அவர் அச்சேறிய அந்நூலின் பிரதி யொன்றைப் பெற்றார். (தொடரும்)

மரநூல் (Botany)

[திரு. பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்கள்]

(முன் கநு-ம் பக்கத் தொடர்ச்சி)

"புரோட்டீஃட்" (Proteid) என்ற சொல்லுக்குப் பொருள் காண்போம். அது ஒரு பொருளுக் கேற்பட்ட பெயர்ச்சொல்லாயுமின்றி, பொருள் விளக்கவொண்ணா மந்திரச் சொல்லாயு மில்லாதிருப்பதனால் அதனை அப்படியே தமிழில் வழங்கவேண்டுமென்ற நியதியில்லை.

புரோட்டீஃட் என்பது முதல் என்றுபொருள்படும் Protos என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இப்பொருளை யடிப்படையாகக் கொண்டு உணவுப்பொருள்களில் இன்றியமையாது காணப்படும் சத்துப்பொருளுக்கு அதைக் குறியீடாக ஆங்கிலத்தில் வழங்கிவருகின்றார்கள். தமிழில் முதல் என்ற சொல், இன்றியமையாது வேண்டப்படும் முதன்மையான பொருளைக் குறிக்கவே வழங்குவது நூன்மரபாகும்; "வினை முதல்", "கைம் முதல்" "முதல்வோன்" "முதனூல்" என்ற சொற்களை நோக்குக. அவை போன்று உணவுப்பொருள் அல்லது உணுப்பொருள்களுக்கு இன்றியமையாத சத்துப்பொருளா யமைந்துள்ள முதற்பொருள் 'உணுமுதல்" என்ற பெயர் கொண்டு Proteid என்பதற்கு நேர் பொருளாகாதோ? இத் தமிழ்ச் சொல் ஆங்கில முதற்சொல்லை

விடப் பொருட் சிறப்பும் பொருத்தமுங் கொண்டுள தென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும்.

Proteid　　　　உணுமுதல்.

Radicle என்பது வேரின் தோற்றுவாயாகும். எனவே வேர்முதல் என்று அதைக் குறிப்பது நேரிதாம்.

Radicle　　　　வேர்முதல்

Plumule என்பது முளையின் தோற்றுவாயாகும். எனவே முளைமுதல் என்று அது குறிக்கப்படும்.

Plumule	முளைமுதல்
Crop } Craw }	இரைப்பை, தீனிப்பை, இரைக்கூடு
Gizzard	அரைப்பை
Root	வேர்
Laternal root	பக்க வேர்
Branch root	கிளை வேர்
Branching	கிளைக்கும், கவடுபடும்
Branching root	கிளைக்கும்வேர், கவடுபடும்வேர்

System என்னும் சொல் வடமொழியில் சமூகம் என்று நேர்பொருள்படும். அதைத் தமிழில் இயற்கையாயமைந்த தொன்றைக் குறிக்கும்போது அமைவு என்றும் முயற்சியால் அமைக்கப்பட்ட வொன்றைக் குறிக்கும்போது அமைப்பு என்றும் கூறலாம்.

System	அமைவு, அமைப்பு.
Root system	வேரமைவு.

Root - hairs என்று ஆங்கிலத்தில் உள்ள சொல் அவ்வளவு சிறந்ததாகத் தோற்றவில்லை. வேருக்கு மயிர் போன்ற சில அமைவு களிருப்பினும் அவற்றை மயிரென்றே குறிக்கவேண்டியதில்லை. தமிழில் Hair என்பதற்கு மயிர், மைர் என்று பொருள் கூறுவர். மசிரு என்று தமிழில் வழங்கும் சொல் வடமொழியில் யாகக் கிரியைகளில் வழங்கும் "ம்ஸ்ரு" என்னும் சொல்லிலிருந்து பெறப் பட்டதாகும். முற்குறித்த மைர், மயிர் என்பது மை, மய் என்ற தாதுவினடியாப் பிறந்ததாம். எனினும் மாநூலில் மயிர் என்ற சொல்லைக் கோடல் வேண்டுமா என்பது கேள்வி.

"பிள்ளை வளர்ப்பான்" (வசம்பு) என்பது ஒரு மருந்துவேருக் குத் தமிழ்ப் பெயர். அது மயிர்கள் போன்ற சிறு அமைவுகளை

நிறையக் கொண்டிருக்கும். குழந்தைகளுக்கு அதனைச் சுட்டு விளக்கெண்ணெயிலோ தேனிலோ கொடுப்பது தமிழர் தம் கைச் சிகிச்சையாகும். அதை வேடிக்கையாக "மயிர் முளைச்சாங் கட்டை" என்று கூறுவதுமுண்டு. 'பிள்ளை வளர்ப்பானை (அல்லது வளர்த்தியை)ச் சிலிம்பு போகத் தேய்த்து' என்று வழக்காற்றிற் கூறுவதுண்டு. அந்த "சிலிம்பு" என்னுஞ் சொல் மயிர் என்ற Hair என்பதையே குறிக்கும். சிலிம்பு, சிலிர், இலிர் என்பன ஒருபொருட் சொற்கள். இஃதன்றி Bryonia Scabra என்ற செடி தமிழில் முசுமுசுக்கை அல்லது மொசுமொசுக்கை என்று பெயர்பெறும். அதற்கு மயிர் போன்ற அமைவுகள் உண்டு.

மயிர் நிறைந்த இந்தியன் மல்பெர்ரி (Indian Mulbery) என்பது தமிழில் முசுக்கட்டை என்று பெயர்பெறும்.

மயிர் நிறைந்த புழுவினத்தைச் சேர்ந்த ஒன்றிற்கு முசுக் கட்டைப் பூச்சி என்று பெயர்.

Iponoca Candiabs என்பது முசுட்டை.

Cassampelos Pareira என்பது பொன் முசுட்டை.

மயிர் அடர்ந்த சிலிர்ந்த எருதின் hump முசுப்பு எனப்படும்.

எனவே முசுவென்பது hair என்னும் சொல்லுக்குப் பொருளாகி இடக்காற்றதாகவு மிருக்கிறது.

தமிழில் செங்குத்தாயுள்ளது சிலிம்பு என்றும் சாய்வாயுள்ளது சிலாம்பு என்றும் குறிக்கப்படுகின்றன.

Hair	சிலிம்பு, சிலிர், இலிர், சிலாம்பு, முசு
Hairy	சிலிம்பிய, சிலிர்த்த, இலிர்த்த, முசுத்த, சிலாம்பிய
Glabrous	சிலிம்பா, சிலிரா, இலிரா, முசுக்கா, இலிரில்லா, சிலாம்பில்லா, சிலிரில்லா.
Pubescent	முசுமுசுத்த, மொசுமொசுத்த
Root hair	வேர்ச் சிலிம்பு, வேர் முசுக்கை.
Root cap	வேர்க்கொப்பி, வேர்க்கவிப்பு.
Aerial Root	விழுது.
Tuber	கிழங்கு.
Tuberous	கிழங்குள்ள.
Tuber formation	கிழங்கு விழுதல்.
Tendril	சுருளை.

—காழி. சிவ. கண்ணுசாமி

இயற்கைப் பொருணூல்--Natural Science

உயிரினங்களின் நிற வேறுபாடுகள்

[திருமதி குணமாணிக்கத்தம்மையார் M.A.]

என் நல்வினைப் பயனால் எனது அருமைத் தந்தையார் திருவாளர் பா. வே. மாணிக்க நாய்க்கரவர்கள் எனக்கு உயர்தரக் கல்வியை ஈந்ததன் பயனாக யான் இயற்கையின் வியத்தகு காட்சிகளை ஒருவாறு ஆராய்ந்து இன்புறும் பெரும் பேறு பெற்றேன். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலர் அருண் மொழியை இச் செந்தமிழ்ச் செல்வியின் பதிப்பாளர் எடுத்துக் காட்டி என்னைச் செந்தமிழ்ச் செல்விக்குக் கட்டுரை எழுதுமாறு ஊக்கியதனால் யான் இக் கட்டுரையை வரைய முன் வந்துளேன். இதன்கண் குறை நீக்கிக் குணங் காண்பது அறிஞர் கடன்.

இங்கே யான் ஆராய்ந் தெழுதுவது 'உயிரினங்களின் நிற வேறுபாடுகளும் அவற்றின் காரண காரியமும்' ஆகும்.

நாம் ஒவ்வொருவரும் நுண்ணூலாராய்ச்சியாளரோ அல்லரோ ஆயினும், சிற்சில காலங்களிலாவது இயற்கை யழகில் ஈடுபடுகின்றோம். இயற்கையில் தோன்றும் பல்வகை நிறங்கள் நம் கண்ணையும் கருத்தையுங் கவர்கின்றன. கதிரவன் கீழ்த்திசையில் எழும்போதும் மேற்றிசையில் விழும்போதும் நீனிறவானம் நொடிக்கொருமுறை மாறிமாறி வெவ்வேறு நிறங்களைத் தோற்றுவிக்கக் கண்டு பெருவியப் பெய்துகிறோம்.

வானத்தில் தோன்றும் நிறங்கள் நம் மனத்தைக் கவர்ந்து ஒருவகை உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவதேபோல் பல செடிகளும், மலர்களும், பறவைகளும், விலங்குகளும் தாம் கொண்டுள்ள பல் வேறு நிறங்களினால் நமது கண்களைக் கொள்ளை கொள்ளுவது மல்லாமல் நமக்கு ஓர் உவகையையும் உண்டாக்குகின்றன.

முதல்நாட் காலையில் அரும்பாக இருக்கும்போது கண்களுக்குப் புலப்படாததோர் நிறமுடையனவாக் இருந்து, மறு

நாட்காலையில் மலர்ந்தபோது கண்களைக் கவரத்தக்க நிறங்காட்டும் பூக்கள் பல உள. இம்மலர்களைப் போன்று வண்ணாத்திப் பூச்சியும் முதல்நாளில் எவ்வித அசைவுமற்ற கூட்டுப்புழுவாக இருந்து அடுத்தநாளில் திடீரென்று பல்வகை அழகிய நிறங்களுடன் பட்டுப் பூச்சியாக விளங்குகிறது. பட்டுப் பூச்சி, சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோர் கருத்தையும் தன் அழகிய நிறங்களால் ஈர்க்கின்றது.

பட்டுப் பூச்சியையும் மலரையும் போலல்லாமல் பலவிலங்குகள் தாம் பிறக்கும்போதோ அல்லது பிறந்து சில நாட்களுக்குள்ளோ சிறிது சிறிதாக நிறம் மாறி ஒரு நிலையை அடைந்து இறக்கும் வரையில் அதே நிலையில் இருக்கின்றன.

எனவே, உயிர்வகைகளிடத்தில் இவ்வாறான நிறவேறுபாடு என் இருத்தல் வேண்டும்? அஃது இவ்வுயிர்களுக்கு எவ்வகையிலாவது பயன் தருகின்றதா? என்னும் வினாக்கள் இயல்பாய் எழுகின்றன. இவ் வினாக்களுக்கு விடையைச் சிந்திப்போமாயின், கண்ணால் நிறங்களைப் பார்த்து ஏது தெரியாமல் அடையும் வியப்பினைவிட நமக்கு உவகையும் வியப்பும் அளவு கடந்து எழும். இதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

உயிர்வகையின் நிறங்கள், கால வேறுபாடு, இட வேறுபாடு முதலியவற்றை யொட்டிப் பலவகையான மாறுதல்களை அடைவனவாக இருக்கின்றன. மாம்பழம் பிஞ்சாக இருக்கும் போது பச்சையாகவும், பழுத்தபோது மஞ்சளாகவும் அல்லது சிவப்பாகவுமோ இருப்பதேன்? நம் நாட்டுக் கரடிகள் கருமையாகவும், துருவ மண்டிலக் கரடிகள் தூய வெண்மையாகவும் இருப்பதெதனால்?

செடி, மரம், பூச்சி, புழு, பறவை, விலங்கு முதலியவற்றின் நன்மைக்காகவே இயற்கையில் இப்படிப்பட்ட நிற வேறுபாடுகள் இருக்கின்றன.

நிறங்களை அவற்றின் பயன் நோக்கிப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அஃதாவது, தற்காப்பு நிறம் (Protective coloration), என்றும், குறிப்பு நிறம் (Recognition marks) என்றும், ஒப்புமை நிறம் (Mimicking coloration or Mimicry) என்றும், எச்சரிக்கை நிறம் (Warning coloration) என்றும், போலி நிறம் (Imitative coloration) என்றும், கவர்ச்சி நிறம் (Alluring coloration) என்றும் அவற்றை வகைப்படுத்தலாம். இவற்றில் எச்சரிக்கை நிறம், போலி நிறம், குறிப்பு நிறம் முதலியவை செடிமரங்களைக் காட்டிலும் விலங்குகளிடத்தில் மிகுதியாய் விளங்குகின்றன.

இனித் தற்காப்பு நிறம் என்பதைப் பற்றி ஆராய்வாம். எல்லாச் செடி மரங்களின் பிஞ்சுகளும் காய்களும் பச்சையாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவைகளின் மலர்களும் பழங்களும் பல் வேறு நிறங்களையுடையனவா யிருக்கின்றன. ஒவ்வொரு மரத்தின் பூவும் பழமும் வேறு வேறு நிறங்களாக இருக்க அவ்வவற்றின் பிஞ்சுகளும் காய்களும் பச்சையாகவே இருப்பானேன்? இஃது அப்பிஞ்சுகளிலுங் காய்களிலுமுள்ள விதைகளின் பாதுகாப்புக்காகவே யாகும்.

பிஞ்சுகளிலும் காய்களிலும் உள்ள பிஞ்சு விதைகள் அவை முதிர முதிர முற்றி, பிறகு வித்துக்களாகின்றன. இவ் வித்துக்கள் நன்றாக முதிராவிட்டால், அவற்றினின்றும் முளைகள் கிளம்பா. ஆகையால் அவை நன்றாக முற்றும்வரையில் ஒருவர் கண்ணுக்கும் படாமல் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றிமையாத தாகின்றது. இக்காய்கள் இலைகளைப்போலவே பச்சையாக இருந்தால் அவை இருக்குமிடம் தெரிந்துகொள்வது கடினம். பறவை, விலங்கு முதலியவை இக் காய்கள் மரங்களின் இருக்குமிடம் தெரிந்துகொள்ள இயலாததால், அவற்றை அழிக்கமாட்டா. இவ்வாறாகப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள நிறங்களே தற்காப்பு நிறம் என்னும் வகுப்பில் அடங்கும்.

வித்துக்கள் சரியாய் முதிர்ந்தபோது, காய்கள் தம் பசுமை நிறத்தைச் சிறுகச் சிறுக இழந்து அந்தந்தப் பழவகைக்கேற்ற நிறத்தை அடைந்து பழங்களாகின்றன. இப்போது அப் பழங்கள் யாவர் கண்களுக்கும் தெளிவாகப் புலப்படுகின்றன. அப் பழங்களின் சுவையை விரும்பி, பறவை விலங்கு முதலியவை அவற்றைத் தின்கின்றன. அவ்வாறே மக்களும் அவற்றைப் பறித்துத் தின்கிறார்கள். பழங்களைத் தின்றுவிட்டு, கொட்டைகளை எறிந்து விடுவதால் அவை வெவ்வேறிடங்களில் விழுந்து, செடி மரங்களாக முளைக்கின்றன. ஆகையால் இந்த நிலையில் இப் பழங்கள் மறைந்திருப்பது தீங்கே ஒழிய நன்மை இல்லை; அவ்வாறு மறைந்திருப்பதால் செடிகள் செழித்துப் பல்கிப் பெருகுதற்கு வேண்டிய பரவுதல் முடியாதாகும். செடி மரங்கள் அசையாது ஓர் இடத்திலேயே இருப்பதால் அவை தாமே தம் விதைகளை வேறிடஞ் செலுத்துதற்கு இயலா. காற்று, நீர், பறவை, விலங்கு முதலியவற்றின் உதவியையே நாடவேண்டும். காற்றாலும் நீராலும் பரவச் செய்யப்படும் விதைகளுக்கு நிறம் வேண்டுமென்பது இல்லை. ஆனால், பறவை விலங்குகளால் பரவச் செய்யப்படும் விதைகள் அவற்றின் கருத்தைத் தம்மிடம் ஈர்த்தல் வேண்டும். இங்ஙனம் ஒட்டிப் பரவும் விதைகள் பல வித்துக்களைக் கொண்டுள்ள பழங்கள் பல நிறங்காட்டி, மணமுங்கொண்டு

இனிமையான சுவையையும் ஏற்று, மனிதன் விலங்கு பறவை முதலியவற்றை அழைக்கின்றன. இப்படியாகத் தம்மிடம் வரும் படி இழுக்கும் நிறத்தைக் கவர்ச்சிநிறம் என்று சொல்லலாம். தன்செயல் நிறைவேற வேறு ஒன்றைத் தன்னிடம் இழுக்க ஏற்பட்டுள்ள நிறம் கவர்ச்சி நிறம். இப்படிக் கவரப்படும் விலங்கோ பறவையோ ஏதாவதொரு எதிர் உதவியை அடைகின்றது.

விலங்குகளிடத்தும் இவ்விரண்டு வகுப்பான நிறங்களைக் காணலாம். ஒட்டகமும் இன்னும் மற்றப் பாலைவன விலங்குகளும் ஏன் பழுப்பு நிறமாக இருக்கின்றன? விலங்குகளையோ அல்லது பறவைகளையோ அவை வசிக்கும் இடத்தைவிட்டுப் பெயர்த்து, உயிர்க்காட்சிச் சாலையில் கூண்டுகளில் வைத்துப் பார்த்தால் அவைகளின் நிறத்தின் பயன் புலப்படாது. ஒட்டகத்தைப் பாலைவனத்தில் பார்ப்போமானால் உடனே அது பழுப்பு நிறமாக இருப்பதற்குக் காரணம் விளங்கிவிடும். ஒட்டகம் பாலைவனத்தில் படுத்திருந்தால் தொலைப் பார்வைக்கு மணற் குன்று போல் தெரியுமே ஒழிய, ஒரு விலங்காகக் காணப்படாது. அஃது இம்மணல் வெளிகளில் மரஞ்செடிகளின்மையால் மறைவாகப் படுத்துறங்குவதற்கில்லை. ஆகையால் அஃது இப் பழுப்புநிறத்தால்தான் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள இயலும்.

இடைப்பூச்சி (இடையன் பூச்சி) என்னும் பூச்சி மிகவும் விநோதமானது. செடி செத்தைகளின் நடுவிலிருந்தால் அஃது அங்கே இருக்கிறதென்று தெரிந்திருந்தாலும் அதைக் கண்டுபிடிப்பது அரிது. குச்சிபோல் அதன் உடல் கால்கள் எல்லாம் மெல்லியனவாய் அக்குச்சியின் நிறத்தையே உடையனவாய் இருக்கின்றன.

நம் நாட்டில் காலிமா (Kallima) என்னும் ஒரு பட்டுப்பூச்சி உண்டு. அதன் சிறகுகளின் மேற்பக்கத்தில் சிவந்த மஞ்சளும் ஊதாவும் கலந்து இருக்கும்; அவற்றின் அடிப்பாகம் நிறத்திலும் உருவத்திலும் காய்ந்த இலையை ஒத்திருக்கும். அது பறக்கும் போது அவற்றின் மேற்பாகமும், தங்கும்போது அடிப்பாகமும் வெளியில் தெரியும். இப்பூச்சி காய்ந்த கிளைகள்மீது தங்குவது வழக்கம். இலையின் நரம்புகளைப் போலவும், காய்ந்து அழுகின இலைகளில் இருக்கும் பூசணத்தைப் போலவும்கூட இறகின் அடிப்பாகத்தில் காணப்படும். இவையெல்லாம் தற்காப்புக்காக அமைந்த நிறங்களே. (தொடரும்)


காலிமா

வரலாற்றுப் பகுதி
History and Biography.

திருவாதவூர்

[திரு. J. M. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் B.A., B.L.]

(முன் எ௮-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்து சேருமென்று அரசனிடத்தில் தெரிவிக்கும்படியாகவும், விலை மதிக்கப் பெறாத ஒரு மாணிக்கத்தை அரசனிடந் தரும்படி யாகவுங் கொடுத்து, குருவானவர் தன் புது அடியாரை விடைகொடுத் தனுப்பினார். மந்திரியார் அரசனையடைந்து, அவனிடம் மாணிக்கத்தையளித்து, குதிரைகள் ஆவணி மூலத்தில் வருமென்று கூறினார். அரசன் மாணிக்கத்தைக் கண்டு வியந்து மந்திரியாரை நம்பி, அவரை முன்னிருந்த பதவியி லமர்த்தினான். (இது 58-வது திருவிளையாடல்.)

16. ஆயினும், பொறாமைகொண்ட மற்ற மந்திரிகளும், பிறரும் திருப்பெருந்துறையில் குதிரைகளில்லை யென்று அரசனிடந் தெரிவிக்க, அதன் உண்மையை ஒற்றர்கள்மூலம் அறிந்த, அரசன் மாணிக்கவாசகரைத் துன்புறுத்துவானானான். அதற்குள் குதிரைகள் தொலைவில் வரும் ஓசை கேட்டது. அவைகள் வருவதனால் கிளம்பும் தூசிகளும் மேகம்போல ஊருக்கப்பால் தோன்றின. காட்டிலுள்ள நரிகள் பரிகளாகவும், தன் கணங்கள் ஏவற்காரர்களாகவும், தான் குதிரை வியாபாரியாகவும், வேதம் வெள்ளைக் குதிரையாகவும் அமைத்துக் கொண்டு சிவபெருமான் மதுரைக்கு வந்துசேர்ந்தார். அதனை யறிந்து மந்திரியை விடுவித்தான் அரசன், மந்திரியிடங் கொடுத்த பொருள்களைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிக விலையுள்ளனவாய்க் காணப்பட்டன குதிரைகள். குதிரைத் தலைவன் குதிரையின் குணங் குறிகளைப்பற்றி அரசனிடம் விவரித்துக் கூறினான். பிறகு, அரசன் கயிறுமாறிக் குதிரைகளை வாங்கித் தன் இலாயத்திற்கு அனுப்பிவிட்டான். அரசன் கொடுத்த சன்மானங்களைப்பெற குதிரைத் தலைவன் மறுத்துத் திரும்பினான். (இது 59வது திருவிளையாடல்.)

17. ஆனால், அன்றிரவே குதிரைகளெல்லாம் நரிகளாகமாறி, உண்மைக் குதிரைகளைத் தின்றும், குதிரைச் சேவகர்களைக் கொன்றும் ஊரைப் பாழ்படுத்திக் காட்டுக்கு ஓடிப்போய்விட்டன. இதைக் கண்டு, மந்திரியார் ஏமாற்றினதாக எண்ணி அரசன் மந்திரியைச் சிறையிலிட்டான். தன் அடியாரின் துன்பத்தைப் பொறுதவராகிச் சிவபெருமான் மதுரையை யழிப்பதுபோன்ற பெரிய வெள்ளம் வைகையாற்றில் வரும்படி செய்தார். அவ் வெள்ளம் மாணிக்கவாசகருக்காக அனுப்பப்பட்டதென்று நினைத்து அரசன் மாணிக்கவாசகரைச் சிறையினின்று விடுவித்தான். (இது அறுபதாவது திருவிளையாடல்.)

18. பிறகு ஊரை வெள்ளத்தினின்று பாதுகாக்க அரசன் முயன்றான். ஊரிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஆற்றங்கரையை உயர்த்த மண் வெட்டிக் கொட்ட வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஒரு திக்கற்ற கிழவி, தானாகவாவது, கூலியாள் வைத்தாவது தனக்கு ஏற்பட்ட வேலையைச் செய்யச் சக்தியற்றவளாயிருந்தாள், பிட்டு சுட்டு விற்பவளாகிய அவள் கடவுளை வேண்டினள். சொக்கநாதர் ஒரு கூலிப்பையனாக வந்து, உதிர்ந்த பிட்டுக்காகக் கூலிபேசி, கரையை உயர்த்த அமர்ந்தார். எல்லாப் பிட்டுகளும் திருவருளினால் உதிர்ந்து போயின. அவற்றை எல்லாம் அடிக்கடி வந்து தின்றுவிட்டு ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் கூலிக்காரப் பையனாய் வந்த பெருமான் தூங்கி விட்டார். அரசன் கரையைப் பார்த்துக்கொண்டு வரும்பொழுது கூலிக்காரன் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு, அவனை யெழுப்பி ஒரு பிரம்பால் அடித்தான். அந்த அடி அரசன் மீதும், உயிருள்ள எல்லாப் பொருள்கள்மீதும் பட்டு வருத்தத்தை யுண்டாக்கியது. உடனே கூலிக்காரப் பையன் மறைந்துவிட்டான். வெள்ளமும்



வாதவூரர் சிலை.

அடங்கிவிட்டது. அரசன் மாணிக்கவாசகரின் பெருமையை அறிந்து, அவரடி பணிந்து அவர் திருஉள்ளப்படி இனி நடக்கலா மென்று கூறினன். மாணிக்கவாசகர் கடவுளுக்குத் தொண்டுபுரிய வேண்டு மென்று தெரிவித்து மதுரையைவிட்டுப் புறப்பட்டுப் போனர். (இதுதான் 61-வது திருவிளையாடல்.)

19. பிறகு மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குச் சென்று கடவுளைக் கண்டு களித்துப் பாடல்கள் பாடினர். பின் பல திருக்கோயில்களையுங் கண்டு பாடல்கள் பாடிக் கடைசியிற் சிதம்பரத்தில் வந்து தங்கினர். அங்கு இலங்கையி லிருந்துவந்த புத்த அரசனும், அவன் ஊமைப் பெண்ணும், மற்ற புத்தர்களும் சமய வாதஞ்செய்ய, மாணிக்கவாசகர் புத்தர்களைத் தோற்கடித்து, ஊமைப் பெண்ணையும் பேச வைத்து, புத்தர்களைச் சைவர்க ளாக்கினர். பிறகு கடவுளே வந்து மாணிக்கவாசகரிடம், திருவாசகம் முழுவதையும் சொல்லச் செய்து, அதனை எழுதி, நடராஜர் பீடத்தில் வைத்துச் சென்ருர். அப்புத்தகத்தை யெடுத்துத் தில்லை மூவாயிரவர், அதற்குப் பொருள் கூறுமாறு மாணிக்கவாசகரைக் கேட்க மாணிக்கவாசகர் நடராஜரே பொருளென்று காட்டி ஜோதியில் கலந்துகொண்டார். இத்துடன் மாணிக்கவாசகர் வரலாறு முடிந்தது.

20. இனித் திருவாதவூர் சிவன் கோவிலைப்பற்றி விவரிப்பாம். கோவிலுக்குமுன் ஒரு திருக்குள முண்டு. ஒரு சிறிய தேரும் இருக்கிறது. கோவிலின் முதற் கோபுரத்தைத் தாண்டியதும், வலது புறத்தில் இடிந்து போன மண்டபம் ஒன்றிருக்கிறது. அதனுடைய வேலைப்பாடு மிகவும் வியக்கத்தக்கது. அதனுடைய கொடுங்கைகள், அவ்வளவு பெரிதாகவும், அவ்வளவு விசித்திரமாகவும் வேறெங்கும் காணமுடியாது. அஃது ஆறடி நீளமாகவும், மேற் பக்கத்தில் இரண்டு வளைவுகளுடனும், அடிப்புறத்தில் ஆழமாகக் குடைந் தெடுக்கப்பட்டதாகவும், மரத்தில் செய்ததுபோலக் காணும்படியாகவும், மண்டபத்தின் நடுவிலிருந்து கிரணங்கள் பாய்ந்ததுபோலவும் கருங்கல்லிற் செய்யப்பட்டிருக்கின்றது. இடதுபுறத்தில் மற்றொரு திருக்குளம் சிதைவுண்டிருக்கிறது. இரண்டாம் பிரகாரத்திற்குள், நடுவில் "வாதபுரீஸ்வரர்" கோவிலும், இடதுபக்கம் "வேதநாசி" அம்மன் கோவிலும், அதற்குப் பின்னல் 1895-ம் வருடம் புதுப்பிக்கப்பட்ட மாணிக்கவாசகர்

கோவிலும் இருக்கின்றன. இரண்டாம் பிரகாரம் வலது பக்கத்தில் நடராஜர் சன்னிதி இருக்கிறது. நடராஜர் விக்கிரகம் அதிக அழகாக அமைக்கப் பட்டிருக்கிறது.

21. ஆவணி மாதத்தில் இவ்வூரிலிருந்து மாணிக்கவாசகர் மதுரைக்கு எழுந்தருளுகிறார். அப்பொழுது மதுரையில் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலை, உயிருள்ள நரியைக் கொண்டுவந்து நடத்துகிறார்கள். பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலையு மப்பொழுதே வைகை யாற்றங்கரையில் நடத்துகிறார்கள். இலட்சக் கணக்கான ஜனங்கள் பல வூர்களிலிருந்து வந்து இத் திருவிழாக்களைக் கண்டு மகிழ்கின்றார்கள்.

ஐவகைக் காட்சியவர்

இலமென்று வெஃகுதல் செய்யார் [1] புலம் வென்ற
புன்மையில் காட்சி யவர். குறள்-174

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் [2] மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். குறள்-199

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
[3] கடனறி காட்சி யவர். குலள்-218

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
[4] நடுக்கற்ற காட்சி யவர். குறள்-65

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
[5] துளக்கற்ற காட்சி யவர். குறள்-699

1. ஐம்புலன்களையும் வென்ற குற்ற மில்லாத அறிவுடையவர்.
இவர் வறுமை காரணமாகப் பிறர்பொருள் கவர்தலை விரும்பார்.
2. மயக்கமில்லாத தூய அறிவினை யுடையவர்.
இவர் மறந்தும் பயனில்லாத சொற்களைச் சொல்லார்.
3. தமது கடமையை யுணரும் இயற்கை யறிவினை யுடையவர்.
இவர் தமக்குச் செல்வஞ் சுருங்கிய காலத்தும் பிறர்க்கு உதவி செய்தற்குத் தளரமாட்டார்.
4. கலங்காத அறிவினை யுடையவர்.
இவர் தாம் இடர்ப்பட்டாலும், அதனைத் தீர்த்தற்கு முன் செய்தார்மாட்டு இழிவான செயல்களைச் செய்யார்.
5. நிலைபெற்ற அறிவினை யுடையவர்.
இவர் அரசனால் நன்கு மதிக்கப்பட்டோம் என்று நினைத்து அவன் விரும்பாததைச் செய்யமாட்டார்.

வ. சுப்பையாபிள்ளை

அருஞ்செய்யுட் பொருட்பகுதி

சீகாளத்தி புராணம்.

பொன் முகரிச் சருக்கம் (அகூ)

[சென்னை. திரு. கோ. இராமலிங்கத்தம்பிரான் அவர்கள்]

கலித்துறை

நிறை யுடைப்பொல முகரிதான் செலவினி னீங்கா
துறுமு வர்ப்பொடு சிலைத்தலை தன்பதி யுடனோ
ரிறை வெறுப்புமின் றொழுகுமா னிலைபெயர் வில்லாச்
செறிகு லத்துதித் தார்க்கது புதுமையோ தெரியின்.

(ப - ரை) நிறையுடை - (நீர்) நிறைதலையுடைய, பொலம் முகரி - பொன் முகரியாறானது, செலவினில் நீங்காது - செல்லு தலினின்றும் நீங்காது, உறும் உவர்ப்பொடு - உற்ற உவர்ப் புடனே, சிலைத்து - ஒலித்து, அலை - அலைகின்ற, தன் பதியுடன் - தன் பதியாகிய கடலிடத்தில், ஓர் இறை - ஒரு சிறிதும், வெறுப் பும் இன்று - வெறுப்புமில்லாமல், ஒழுகும் - செல்லாநிற்கும்; நிலை பெயர்வு இல்லா - நிற்றலினின்றும் பெயர்தலில்லாத, செறி குலத்து - நெருங்கியகுலத்து (மலைக்குலத்து) உதித்தார்க்கு - தோன்றினவர்க்கு, தெரியின் ஆராயின், அது புதுமையோ - அங்ஙனஞ் செல்லுதல் புதுமையாகுமோ. (ஆகாதென்றபடி.)

சிலேடையால், நிறையுடைப் பொல முகரி - கற்பினையுடைய பொன்முகரியாகிய பெண், செலவின் நீங்கா - ஒழுக்கத்தினின் றும் நீங்காது, உறு உவர்ப்பொடு - உற்ற வெறுப்பொடு, சிலைத்து - (தன்னை) அதட்டி, அலை தன் பதியுடன் - அலைக்கின்ற தன் நாயக னுடன், ஓர் இறை - ஒரு கணப் பொழுதும், வெறுப்பும் இன்று ஒழுகும் - வெறுப்பும் இல்லாமல் ஒழுகும். கற்புநிலை பெயராத செறிந்த குலத்திற் பிறந்தார்க்கு ஆராயுமிடத்து அங்ஙனம் ஒழுகு தல் புதுமையோ என்றபடி. இது வேற்றுப்பொருள் வைப் பணி. அலைதன்பதி என்பதில் கடலுக்காங்கால், அலை தன் வினையாகவும், நதிக்காங்கால் பிறவினை மேற்றும் கொள்க.

சிறுகதைப் பகுதி-Short Stories

அலைகடலளித்த ஆரணங்கு

[சுவாமிக் கண்ணன் எழுதுவது]

(முன் கூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

செந்திநாதன்:—"அறிவு திரும்பியவுடன், தன்னைச் சுற்றியிருந்த மக்கட் டிரளைப் பார்த்து, அவள் அஞ்சி உடற்குன்றியதைக் கண்டேன். அவளுடன் வந்த ஏனைய பெண்கள் எங்கிருந்தார்கள் என்று கண்டுபிடிப்பதற்கில்லை. எனவே, உடனே அப் பெண்ணைத் தூக்கி என்னுடைய "ஆஸ்டின்" உந்துவண்டி (Motor Car)க்குக் கொண்டுசென்றேன். அவளை எங்கே அழைத்துச் செல்வதென்று தெரியவில்லை. நேரே என் வீட்டிற்கே கொண்டு செல்லலாமென்ற கருத்துடன் உந்துவண்டியை விரைவாகச் செலுத்தினேன். வண்டி சென்ற விரைவினால் நல்ல காற்று முகத்திற் படவே, அம்மங்கை சற்று நேரத்திற்குள் நல்லுணர்வு பெற்றாள் போலும்! "நண்பரே! தாங்கள் இன்று செய்த பேருதவி கருதியே என் நாணத்தைவிட்டு யான் தங்களிடம் முதன்முதலாகப் பேசத் துணிவு கொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு நன்மையே யளிப்பாராக! யான் இருப்பது மயிலாப்பூரைச் சேர்ந்த மந்தைவெளியிலுள்ள காரணேச்சுரர் வீதியின் கீழ்கோடி யாகும். அருள் கூர்ந்து என்னை நேரே என் வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள்" என்று இசைத்தாள் அவ்வெழிலாள். என் செவி மாந்திய அந் நல்லிசையாஞ் சொல்லிசையில் ஈடுபட்டவனாய் யான் மறுமொழி கூறாமல் நேரே குறித்த இடத்திற்கு வண்டியைச் செலுத்தினேன். காரணேச்சுரர் தெரு கீழ்கோடிக்குச் சென்றதும் கூரைவேய்ந்த ஒரு சிறு வீட்டைக் காட்டி "அதுவே என் இல்லம்" என்றாள் மங்கை. வண்டியை நிறுத்தினேன். வாய்மொழி யொன்றுங் கூறாது அந் நங்கை நல்லாள் வண்டியைவிட் டிறங்கி உள்ளே சென்றாள். சற்று மனத் தளர்ச்சி யுற்றவனாய் உள்ளே செல்லலாமா வேண்டாமா என்று நான் சிந்தித்துக்கொண் டிருக்கும்பொழுதே வீட்

டின் வாயிற் கதவு திறக்கப்பட்டு "ஐயா, உள்ளே வாரும்" என்ற ஒரு குரல் கேட்டது. உட்சென்றேன். ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது எழுபது எழுபத்தைந்து வயதிருக்கும் என்று மதிப்பிடக் கூடிய ஒரு முதியவர் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தார். அவரது இடக்கையில், உட்கார்ந்திருந்த அந்நிலையிற்கூட, ஒரு கட்டையான மூங்கிற்றடியைப் பிடித்திருந்தார். நான்கடி நீளமுள்ள அத்தடியின்மீது ஏதோ சில சித்திரங்கள் செதுக் கப்பட்டிருந்தன. திருப்பதிக்குச் சென்று வருவோர் வாங்கி வரும் மூங்கிற்றடிபோல் அது காணப்பட்டது. நான் உட் சென்றதும் என்னை, "உட்கார்" என்றுகூடச் சொல்லாமல் அப் பெரியவர் "நீரில் அமிழ்ந்தி யிறந்திருக்கவேண்டிய என் பேத்தியை நீ காப்பாற்றியதாக அவள் சொன்னாள். ஒருவிதத்தில் அஃது எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. ஆயினும் விரைவிற் பருவ மடைய விருக்கும் அப் பெண்ணை நீ பலாறியத் தூக்கிவந்து வண் டியில் வைத்து ஓட்டிவந்தது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. போனது போகட்டும்; நான் பரம ஏழை. உனக்கு ஏற்றவாறு பரிசளிப்பதற்கு என்னிடம் ஒன்றுங் கிடையாது. ஒருயிரைக் காப்பாற்றினேம் என்ற மகிழ்ச்சியே உனக்குப் பரிசாக இருக் கட்டும். நீ என் பேத்திக்கு உதவி செய்ததை இன்றுடன் மறந்து விடு. அவள் உடல்நலத்தைக் கேட்டறியக் கருதி மறுபடி இப் பக்கம் வருகிற எண்ணத்தை இதோடு விட்டுவிடு. கடவுள் உனக்கு நன்மையே யளிப்பார். சரி! இனி இங்கு நிற்கவேண் டாம், போய் வா" என வெட்டி மொழிந்தார். இப்படியும் உலகில் நன்றி மறப்போர் இருப்பார்களா என்று நினைத்தவண்ணம் உள்ளெழுந்த ஆத்திரத்தை யடக்கிக்கொண்டவனாய்த் துண்ணென வெளிவந்து என் வண்டியிலேறி வீடுவந்து சேர்ந்தேன். ஆயினும் அப்பெண்ணின் நினைவு என்னைவிட்டு நீங்கவில்லை."

வடிவேலன்:—"அந்த நினைவில் உன் எம்.பி. பி.எஸ். தேர்தலை மறந்துவிடாதே."

செந்திநாதன்:—"அத்தேர்தலின் தலையில் இடி விழட்டும். அதிற் றேர்ச்சி யடைந்து நான் பெறவிருக்கும் பயன் என்ன?"

வடி:—"என்ன உளறுகிறாய்?"

செந்தி:—"நானா உளறுகிறேன். மணந்தால் அப்பெண்ணை மணப்பது; இன்றேல் மணமில்லாமலேயே இம்மண்ணைத் துறப் பது; இஃது உறுதி."

* * * * *

" அம்மா ஞானம், உன் எண்ணம் இன்னதெ என நான் நன்கறிவேன். பரிதி மறைவுநாளன்று பலரறிய உன்னைத் தொட்டுத் தூக்கிய அச்சிறுவனையன்றி மற்றெவனையும் மணக்க உன் கற்பிற் சிறந்த தூய உள்ளம் இசையாது என்பது நானறியாததன்று. ஆயினும் என் செய்வது? முடவன் கொம்புத்தேனுக் காசைப் படுவது போலன்றோ இருக்கிறது உண்மை! அச்சிறுவனைப் பற்றித் தீர உசாவினேன். சென்னை அரசாங்கத் தலைமைப் பொறிவலாளர் (Chief Engineer to the Govt. of Madras) திவான்பகதூர் சங்கரநாராயணய்யரின் மூத்த பிள்ளையாம் அவன். எம். பி, பி. எஸ், என்ற உயர்தர மருத்துவத் தேர்தலுக்குப் படிக்கிறான். வயது இருபத்திரண்டுதான் ஆகிறது. அவன் படிக்கும் மருத்துவக் கல்லூரியில் நடக்கும் காற்பந்து, கோற்பந்து முதலிய விளையாட்டுகளில் அவனே முதன்மைபெற்றுப் பல பரிசுப் பதக்கங்கள் வாங்கியுள்ளானும். நல்லொழுக்கத்திற்கும் நற்குணத்திற்கும் அவன் நிலைக்களன் என்பதை நானே துணிந்து கூறுவேன். என்ன இருந்துமென்? அவன் தந்தை, இருபதினுயிரம் ரூபாய் எவன் கொடுக்கிறானே அவன் பெண்ணைத்தான் கட்டுவதென்று முடிவு கட்டியுள்ளாராம். நாமிருக்கும் நிலையில் இருபதினுயிரம் ஓட்டாஞ்சில்லிகூடக் கொடுக்கமுடியாது என்பது உனக்குத் தெரியும். பாக்கம் புகைவண்டிச் சேதத்தில் உன் தாய்தந்தைக ளிருவரும் மடிந்தபின் இந்தப் பதினுன்கு ஆண்டுகளாக—உன்னை ஒருவயதுக் குழந்தையாக அவர்கள் விட்டுச் சென்றார்கள்—நான் படாதபாடுபட்டு வளர்த்தேன். திங்களுக்கு மறுவிருந்தாலு மிருக்கும்; உனக்கு எத்தகைய மறுவுங் கூற முடியாதென்பதை இம் மந்தைவெளியிலுள்ளார் எல்லோருங் கூறுவார்கள். அவ்வாறு பெண்மக்களுக்கே எடுத்துக்காட்டா யிலகுமாறு உன்னை வளர்த்துப் பொருளாசைப் பேய்பிடித்த ஒருவன் வீட்டில் உன்னைக் கொண்டுய்க்க எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை. ... ..."

ஞானம்:—"தாதா, என்னை மன்னியுங்கள். அவரை மணந்தால் மணப்பது; இன்றேல் கன்னியாகவே என் காலத்தைக் கழிப்பது என்று உறுதி செய்துவிட்டேன். ஆகையால் என் மணத்தை யொட்டிய கவலையைத் தாங்கள் ஒழித்துவிடுங்கள். இறைவனருள் கூடின் கைகூடாத தொன்று முண்டோ?"

பெரியவர்]:—"உண்மை. அச்சிறுவனும் உன்னையன்றி யொருவரையும் மணப்பதில்லை யென்றும் அதனல் தனக்கு வரவிருக்கும் நூருயிரரூபாய் பெறும்படியான சொத்தைத் தானிழப்பதாயினும் கவலையுறப் போவதில்லை யென்றும் தன் நண்பன் வடிவேலனிடங் கூறிக்கொண்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். ஆ! அவன் கூறுவதுமட்டும் உண்மையாயிருந்தால்...அவனும் ஒன்று மிழக்க வேண்டியதில்லை; நானும் ஏற்ற கணவனுக்கு உன்னை யளித்து விட்டேன் என்ற நினைவுடன் அமைதியாக இறப்பேன்.—"

ஞானம்:—"நீங்கள் அமைதியா யிறப்பது சரி; அவர் எப்படி ஒன்றும் இழக்கவேண்டியதில்லை என்று கூறினீர்கள்?"

பெரியவர்:—"ஒன்றுமில்லை. நான் ஏதோ சொல்மாருட்டமாகக் கூறிவிட்டேன். அதையொரு பொருளாக் கருதிக் கேட்க வேண்டாம்"

* * *

ஒருநாள் மாலை வெளிவந்த "உண்மை யுரைப்போன்" என்ற நாள் தாளில் (Daily) கொட்டை கொட்டையான எழுத்தில் பின்வருமாறு ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது:—

முக்கிய அறிவிப்பு

"என் மூத்த மகன் ச. செந்திநாதன் (எம். பி. பி. எஸ். தேர்தலுக்குப் படிக்கும் மாணவன்) பரம ஏழையான ஒரு பருவமடைந்த பெண்ணை என் நோக்கத்திற்கும் குல வழக்கத்திற்கும் மாருக மணக்கப்போவதாக முடிவுகட்டிக் கூறுவதால் எனக்கும் அவனுக்குமுள்ள தொடர்பை இதனல் விலக்கிவிடுகிறேன். நான் என் சொந்த உழைப்பினுற் சேர்த்துள்ள சொத்தில் அவனுக்குச் சேரவேண்டிய நூருயிர ரூபாய் பெறும்படியான பகுதியும் அவன் அப்பெண்ணை மணக்கவில்லை யென்ருே அல்லது அப்பெண் வீட்டார் என் குடும்ப உயர்நிலைக் கேற்றவாறும் மாப்பிள்ளை மேற்படிப்பு படிப்பதற்காகவும் கொடுக்க வேண்டிய தொகையைக்கொடுக்க இசைந்துள்ளார்களென்ருே கூறினுலொழிய அவனுக்குக் கொடுக்கப்படமுடியாது. இன்றுமுதல் அவனுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகைகளுக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டேன் என்பதைத் திண்ணமா யறியவும்.

இப்படிக்கு,

தி. சங்கரநாராயணய்யர்

(திவான்பகதூர்)

சென்னை யரசாங்கத் தலைமைப் பொறிவலாளர்.

* * *

இரவு ஏழுமணி யிருக்கும். காரணேச்சுரர் கோயில் வீதியி லுள்ள பெரியவர் வீட்டின் கதவு தாழிடாமல் மூடப்பட்டிருந்தது. உள்ளே எண்ணெய் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. கட்டிலின் மீது பெரியவர் கடுமையான காய்ச்சலினால் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தார். ஞானம் அவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டு ஒரு குவளையில் வெந்நீர் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

அடைத்திருந்த கதவு திறந்தது. முகவாட்டத்தோடு கூடிய ஓர் உருவம் உள்ளே வந்தது. வந்தவன் செந்திநாதனே. அவன் கையில் "உண்மை யுரைப்போன்" என்ற நாள் தாள் இருந்தது. வாய் மொழி யொன்றுங் கூறாமல் மெல்ல நடந்துவந்து அத்தாளில் "முக்கிய அறிவிப்பு" என்ற செய்தி யிருந்த ஏட்டைப் பெரியவரின் கையில் அவன் கொடுத்தான். அவன் நினைவு அவனுக்கு இருப்ப தாகவே தோற்றவில்லை. காய்ச்சலரல் வருந்திக்கொண்டிருந்த பெரியவர் "அம்மா, அதிலென்ன எழுதியிருக்கின்றது, படி, கேட்கலாம்" என்றார். ஞானம் இனிமையான குரலில் செய்தி யைத் தெளிவாகப் படித்தாள். அவள் படித்து முடிந்ததும், "அலைகடலளித்த இவ்வாரணங்கிற்காக என் தந்தையை வெறுத் துத் தாயபாகத்தைத் துறந்து ஓட்டாண்டியாய் இங்குவந்துளேன். என்னை இந்நிலையில் ஏற்றுக்கொள்ள மறுத்தால் நேரே அவ்வலை கடலுக்கே சென்று என்னுருயிரை விடுவேன். முக்கண்ணன்மீது ஆணை" என்று தழுதழுத்த குரலிற் கூறினான் செந்திநாதன்.

"ஆ" என்ற ஓர் ஓசை பெரியவர் வாயிலிருந்து புறப்பட் டது. உடனே பெரியவர் கட்டைபோற் சாய்ந்துவிட்டார். மங்கை நல்லாள் மதிகலங்கி விம்மி யழலானாள். பெரியவர் நெஞ் சடைப்புண்டிருக்கிறார் என்பது கண்ட செந்திநாதன் சட்டென எழுந்து குவளையிலிருந்த நீரை அவர் முகத்திற் றெளித்தான். பின் கதவைச் சற்றுத் திறந்துவைத்துக் கட்டிலை அதனருகே இழுத்துப்போட நினைத்து அதை வலிவாக இழுத்தான். கட்டிற் காலுக்கும் சுவருக்கு மிடையே குறுக்காக மாட்டிக்கொண்டிருந்த பெரியவரின் மூங்கிற்றடி "மளார்" என முறிந்தது. திடுக்கிட்டுப் போய்ச் செந்திநாதன் முறிந்த அக்கழியை வெளியே யெடுத்தான். முறிந்த துண்டொன்றினுள் கற்றையாக ஒரு தாட்சுருள் இருந்தது. அதை வெளியிலெடுத்துப் பார்த்தான். ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக நூறு நோட்டுகள் இருந்தன. அதே

சமயத்தில் "செந்திநாத்; அதுவே என் பேத்திக்கு நான் கொடுக்கும் "ஸ்ரீதனம்" உன் தந்தை கொடுக்கவேண்டிய நூறுயிர ரூபாய்க்குப் பதிலாக இதையெடுத்துக்கொள். இத்துடன் விலை மதிக்கவொண்ணாத இம்மங்கை நல்லாளையுங் கைக்கொள். வேறெந் நோக்கமுமின்றி இவளையே மணக்கும் விருப்பமுடைய ஒருவற்குக் கொடுக்கவென்றே இப்பொருளைச் சேர்த்துவைத்திருந்தேன். அப்பொருள் இருந்ததனால்தான் நான் எந்நேரமும் அம் மூங்கிற்றடியைக் கைவிடுவதில்லை. பதினான்கு ஆண்டுகளாய் என் கையை விட்டகலாதிருந்த இம்மூங்கில் இன்று முறிந்தது 'சேரவேண்டிய இடத்திற்குப் பொருள் சென்று சேர்ந்துவிட்டபடியால் என் கவலையொழிந்தது' என்பதைக் குறிக்கவேபோலும்," என்று திருத்தமாய் மொழிந்தார் பெரியவர். காரிகை யெய்திய பெரும்பேறு கண்டு அவர் காய்ச்சல் மாய்ந்தொழிந்தது போலும்! திறந்த கதவின் வழியாக நிறைமதி தண்கதிர் வீசி வெள்ளொளி பரப்பி நின்றது தெரிந்தது. ஞானத்தின் முகவொளிதானோ அஃது என்று வியப்புற்றான் செந்திநாதன்.

முற்றிற்று.

குறிப்பு:

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி

தனித் தமிழ்த்தேர்வுகள் தேர்ச்சிக் குறிப்பு

இற்றைக்குப் பத்தாண்டுகட்கு முன்னர் ஏற்பட்டுள்ள இச்சங்கம், 1926-முதல் ஆண்டுதோறும் தனித் தமிழ்த் தேர்வுகளைப் பல முக்கிய தலைநகர்களிலும் நடத்தி, முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ந்தவர்க்குப் பதக்கப் பரிசும் இரண்டாம் மூன்றும் வகுப்புகளிற் றேர்ச்சியுற்றவர்கட்குத் தேர்ச்சி இதழ்களும் சங்கத் தலைவர், நம் மாகாண மாஜி வளர்ச்சி நெறி அமைச்சர். திருவாளர். சர். தி. நெ. சிவஞானம்பிள்ளை பி. எ. அவர்கள் கையெழுத்துடனும் சங்க முத்திரையுடனும் கொடுத்துள்ளது.

இதுவரை, இச்சங்கத் தேர்வுகள் மூன்றுக்கும் விண்ணப்பித்தவர்கள் 135-பேர் இவர்களில் தேர்ச்சியுற்றவர்கள் கலாசாலைகளில் தமிழாசிரியர்களாக வேலைபார்த்து வருகின்றார்கள்.

நாளது 1933 ஜூலை 26, 27, 28-க்குச் சரியான எசுய ஆடித்திங்கள் யக, யஉ, யங, புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடந்த தமிழ்த் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர். எழுதியவருந் தேர்ந்தவரும் இருவர். விபரம் அடியிற் கண்டபடி.

தமிழ்த் தேர்வு மூன்றும் வகுப்பு

1. பதிவெண், 97. P. நடேசமுதலியார், உபாத்தியாயர், 26 புஜன்னராவ் வீதி, வாலாஜாபேட்டை, வடஆற்காடு ஜில்லா.
2. ,, 95. மா. கா. முத்துசாமிதேசிகர், மானுபாநல்லூர், வீரவநல்லூர். S. I. R. திருநெல்வேலி ஜில்லா.

இச்சங்கத்தின் தேர்வுகட்குரிய பாடங்கள் 1935 ஜூன் முதல் மாறுதலடையும். மாற்றப்பட்ட பாட அட்டவணை அடுத்த இதழில் வெளியிடப்பெறும். தமிழகத்தில் தமிழறிஞர்களைப் பலராக்க முயலும் இச்சங்கத் தேர்வுகட்கு வினாத்தாள் குறித்தும், விடைத்தாள் திருத்தியும், தேர்வுகளை ஆங்காங்கு மேற்பார்த்து நடத்தியும் உதவிபுரிந்த தமிழ் மெய்யன்பர்கட்குச் சங்கத்தின் நன்றி பெரிதும் உரித்தாகின்றது. விண்ணப்பதார்களும் பலராகப் பெருகித் தேர்ச்சிபெற்றுச் சிறப்பாராக.

அன்புள்ள

திருநெல்வேலி 31-10-1933 }

பு. சி. புன்னைவனநாதன்
அமைச்சர்
தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

பிரிவாற்ருமை

பிரமஞான சங்கத் தலைவர் டாக்டர் அனிபெசண்டு அம்மையார் அவர்கள் 1933-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் மாலை நாலு மணிக்கு இந்தப் பூதஉடல்நீத்து என்றும் அழியாப் புகழுடம்பு எய்தினார்கள். அவர்களது நீண்டகால விழுமிய உலக வாழ்க்கை, உலகிலுள்ள பல நாட்டு நன்மக்களுக்கு, கடவுட்பற்று மெய்அறிவு மெய்அன்பு, உண்மை, பொறுமை, அமைதி எவர்க்கும் உதவியே புரியும் செயல் முதலிய நற்பண்புகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்து அவர்களை எல்லாம் அந் நற்பண்புகளை உறுதியாய்க் கடைப்பிடித்து, ஒழுகச்செய்த பெருமை வாய்ந்தது. அவர்கள் தங்கள் நீண்டகால நல்வாழ்க்கை முழுவதும் எண்ணிறந்த சொற்பொழிவுகள் வாயிலாகவும் எண்ணரிய புத்தகங்கள் வாயிலாகவும் பல பத்திரிகைகள் வாயிலாகவும் வேறு பல வழியாலும் பயன் கருதாது இடைவிடாது செய்துவந்த மக்கட் பேருதவிச் செயல்களுக்குப் பொதுவாக இந்த உலகம் முழுவதும், சிறப்பாக நமது தாய் நாடாகிய இந்தியாவும் என்றும் மறவாது நன்றி செலுத்தக் கடப்பாடு உடையவைகள். அவர்களது நற்புகழ் இனி வருங்காலத்திலும் அழியாது நின்று நிலவி உலகை நல்வழிப் படுத்தி உய்யச் செய்வதாக.

23—10—1933   மா. வே. நே.



ராய்பகதூர் P. சுந்தரம்பிள்ளை, எம்.ஏ.